www.padippakam.com

# மைக்கேல் காலின்ஸ்
# ( 1890 - 1922 )






அயர்லாந்துக் குடியரசு (தென் அயர்லாந்து)

பரப்பளவு - 70,282 சதுர கி.மீ
சனத்தொகை-3,535,000
தலைநகரம் -டப்ளின்

வட அயர்லாந்து

பரப்பளவு -14,121 சதுர கி.மீ
சனத்தொகை-1,557,000
தலைநகரம் -பெல்பாஸ்ற்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சி வரும் இல்லையா அம்மா?



ஏய்....அம்மா! புரட்சியென்றால் என்ன?
அது போராட்டமடா கண்ணா!
வீரர்கள் சண்டை போடுவார்களே....அதுவா?
ஆமா குழந்தை! போரிடுவாங்க
கொல்லுவாங்க, சாவாங்க
நாம் அன்னியனை எதிர்த்துப் போர் செய்கிறோமா?
ஆமா கண்ணு! அப்படித்தான் நினைக்கிறேன்.
நாம் ஏன் அவங்களோட போரிடணும் அம்மா?
ஏன் என்றால் அவங்கள் எங்களை ஏமாற்றினாங்கள்
அப்போ நாம் இப்போது அடிமைகளா அம்மா?
ஆமாண்டா அது அப்படித்தான்.
அப்படியென்றால் நான் அடிமையாகமாட்டேன் அம்மா.
எனக்குத் தெரியும் மகனே—நாங்கள்
ரொம்ப நாளைக்கு இப்படி இருக்கமாட்டோம்
கண்ணே தூங்கு!

புரட்சி வரும் இல்லையா அம்மா?
ஆமாம் மகனே புரட்சி வரும்
வாயை மூடித்தூங்கடா.
ஏய் அம்மா! எப்போ புரட்சி வரும்?
சீக்கிரம் மகனே...சீக்கிரம் மகனே..
ஆனால் அம்மா!
நம்மிடம் இராணுவம் இல்லையே?
சொன்னால் கேளடா தூங்கு
நாம் இராணுவம் அமைப்போம்
கவலைப்படாதே
ரொம்பநாளாகுமா இராணுவம் அமைக்க?
இல்லைடா மகனே அப்படி நினைக்கேல்ல
நம்ம படையிலே யாரு இருப்பினம்?
ஓ...நம்ம அப்பா உன்னோட மாமன்மார்
நம்ம ஜனங்கள் எல்லோரும்
வாயை மூடித் தூங்கடா கண்ணு
நானும்கூட .....நானும்கூட
பெரியவனானதும் சேரலாமா?
நீ அதிலே சேரமுடியாது
வாயை மூடித் தூங்கடா
வீரன் ரொம்பப் பலசாலியாக இருக்கணும்
ராத்திரி முழுவதும் கண்முழிச்சிருந்தா
எப்படித்தான் நீ பலசாலியாவே
சொல்வதைக் கேளடா
உன் துப்பாக்கியை எடுத்துக்கோ
அதோட கொடியையும் எடுத்துக்கோ
தூங்கி அதையே கனவில பாரு
சரிதானே கண்ணே
ச..ரி....ம்மா



** ரஷ்யக் கவிதையிலிருந்து...

www.padippakam.com


விரும்பினார் அவரது கருத்துக்கு மிக அதிகமான ஆதரவு இருந்தது. ஆனால் வட அயர்லாந்தின் மந்திரிசபையும், அதன் தலைவரும் முழு அரசு ஒன்றின் கீழ் இயங்க மறுத்த தால் வடக்கு, தெற்கு என அயர்லாந்துக் குடியரசு இரண்டாகப் பிரிக்கப்படுவது தவிர்க்கமுடியாமல் போயிற்று.

1921ம் ஆண்டு ஆங்கில-ஐரிஷ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தென் அயர்லாந்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புக்கள் விலக்கப்பட்டன. மைக்கேல் காலின்ஸ். தென் அயர்லாந்துக் குடியரசின் தலைவரானார்.

ஆனால் அடுத்த ஆண்டே அதாவது 1922ம் ஆண்டு ஆவணிமாதம் 22ம் திகதி மைக்கேல் காலின்ஸ் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டார்.

மிகப் பெரும் வல்லரசு எனக் கருதப்பட்ட பிரிட்டனுக்கு மரண அடிகொடுத்து அடக்கப்பட்ட உலக மக்கள் மத்தியில் ஓர் எழுச்சியை உண்டுபண்ணிய அயர்லாந்துப் போராட்டம், அனேக நாடுகளில் கொத்தளிக்கும் மக்கள் புரட்சிக்கும், போராட்டங்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

---** * **---





படிப்பகம்

www.padippakam.com

1ம் உலகப் போரில் இங்கிலாந்து சார்பில் போராட லண்டனில் கட்டாய இராணுவ சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்டபொழுது எமது விடுதலைப் புரட்சியை ஆரம்பிக்க இதுவே தக்கதருணம் எனத் தீர்மானித்து அயர்லாந்திற்கு தப்பி வந்த மைக்கேல் காலின்ஸ் 'ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்கத்தின் 'போராட்டப் பிரிவாகிய 'தொண்டர்படையில்' இணைந்துகொண்டான்.

அயர்லாந்தில் பல வருடங்கள் தலைமறைவுப் போராட்டத்தை நடாத்தினான். 'தொண்டர்படை' என்ற அமைப்பின் தீவிரத் தன்மை போதாமையினால் தீவிரவாதப்போக்குடைய ஐரிஷ் தொண்டர்கள் பிரிந்துசென்று 'ஐரிஷ் தொண்டர்படை' என்ற புதிய அமைப்பை உருவாக்கினார்கள். அதற்கு மைக்கேல் காலின்ஸ் தலைமைவகித்தான்.

ஐரிஷ் தொண்டர்படையினருக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகியது. இதனால் இவ் அமைப்பின் ஆதரவாளர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்களினால் இம்சைப்படுத்தப்பட்டார்கள். இவற்றைப் பார்த்த ஐரிஷ் தொண்டர்படையினர் வெகுண்டெழுந்தனர்.

உளவாளிகள், துரோகிகள், தகவல் கொடுப்போர்கள் ஆகியோர் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். பிரிட்டிஷ் அரசநிர்வாகம் ஆட்டம் கண்டது.

இந்தநிலையில் 'கறுப்புக் கபிலர்' எனும் சங்கேதப்பெயரைக் கொண்டு பிரிட்டிஷ் அதிரடிப்படையினர் 15,000 பேர் ஐரிஸ் புரட்சியாளர்களை ஒடுக்க அயர்லாந்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களுடைய அராஜகம் அயர்லாந்து எங்கும் தலைவிரித்தாடியது. ஐரிஷ் மக்கள் வெட்டப்பட்டும், சுடப்பட்டும், பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

இந்தநிலையில் பாராளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியது. ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஐரிஷ் மக்களின் ஒருமித்த கருத்தை உலகத்திற்குத் தெரியப்படுத்த எண்ணி அப் பாராளுமன்றத் தேர்தல்களில் இன்னுமொரு, ஐரிஷ் குடியரசை வலியுறுத்திவந்த கட்சியான 'சின்பீன்' கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்டு அமோக வெற்றியைப் பெற்றனர். ஆனால் முன்னர் எடுத்த தீர்மானத்தின்படி பிரிட்டனின் கட்டுப்பாட்டிலுள்ள பாராளுமன்றத்திற்குச் செல்லாமல் 'டெயில் ஐரான்' எனும் பெயருடன் தேசிய சட்டசபையைக் கூட்டினர். இதன் இராணுவ அணியாக ஐரிஷ் தொண்டர்படை திரைமறைவில் இயங்கியது.

பின்னர் இத் தொண்டர்படை ஐரிஷ் குடியரசு இராணுவம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட தேசிய சட்டசபையின் தலைவராக டிவெலாராவும், நிதி மந்திரியாக மைக்கேல் காலின்சும் செயற்பட்டனர். ஆனால், அரசபடைகளிடமிருந்து தப்ப தலைமறைவு வாழ்க்கையைத் தொடரவேண்டியிருந்தது.

1ம் உலக மகாயுத்தத்தின் முடிவில் அயர்லாந்திற்கு சுயாட்சி கொடுப்பதாக இருந்த பிரிட்டிஷ் அரசு பின்னர் அதை வழங்காது குறைந்த அதிகாரங்களைக்கொண்ட ஒரு தீர்வை வழங்கவே முன்வந்தது. இத் தீர்வுக்கான மசோதாவை ஏற்பதா? விடுவதா? என ஐரிஷ் தொண்டர்படையினருக்குள் கருத்து மோதல்கள் எழுந்தன.

இந்த மசோதாவை மறுத்தால் இதுவரை காலமும் ஐரிஷ் மக்களுக்கு இருந்துவரும் உலக அனுதாபம் கிடைக்காமல் போய்விடும் என்பதாலும் இதைத் தற்காலிகமாகப் பெற்று தந்திரோபாய அடிப்படையில் அயர்லாந்தை ஒன்றுபடுத்த வேண்டும் என்பதற்காகவும், மைக்கேல் காலின்ஸ் அம் மசோதாவை ஏற்கவேண்டுமென


படிப்பகம்

www.padippakam.com

# தெரிந்து கொள்ளுங்கள்

## மைக்கேல் காலின்ஸ்

(1890 — 1922)

700 ஆண்டுகளிற்கு மேலாக பிரித்தானிய அதிகார வர்க்கத்தின் பிடியில் சிக்கி அடிமைகளாக உழன்றுகொண்டிருந்த அயர்லாந்து மக்களின் விடுதலைப் புரட்சிக்குத் தலைமைதாங்கி, பிரித்தானிய சர்வாதிகாரிகளுக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவன்தான் மைக்கேல் காலின்ஸ்.

ஐரோப்பாக் கண்டத்தில் இங்கிலாந்திற்கு அருகிலிருக்கும் ஒரு தீவுதான் அயர்லாந்து ஆகும். இந்த மக்கள் ஐரிஷ் இனத்தவர்கள் என்று அழைக்கப்படுவர். இவர்களுடைய தாய்மொழி "கயிலிக்' ஆகும்.

1495ம் ஆண்டு காலப்பகுதியில் பிரித்தானிய அரசர்களால் வெற்றிகொள்ளப்பட்ட அயர்லாந்தின் தலைநகர் 'டப்ளினில்' பொம்மை அரசு ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு ஆங்கிலேய மன்னர்கள் அனுமதிக்காத சட்டத்தை நிறைவேற்ற அதிகாரம் கிடையாது.

போர்செய்து ஒரு நாட்டை அடிமைப்பிடியில் வைத்திருப்பதை விட அப் பிரதேசங்களில் தமது மக்களை குடியேற்றுவதன்மூலம் அப் பிரதேசத்தை நிரந்தரமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்பதுதான் ஆக்கிரமிப்பாளர்களின் தந்திரோபாயம்.

இதன்படி ஆங்கிலேய அரசு தனது மக்களை அயர்லாந்தின் வட பகுதியில் கொண்டுசென்று குடியேற்றியது. இதன்மூலம் அத் தீவின் சொந்தக்காரர்களான 'கெயிலிக்' மொழி பேசும் கத்தோலிக்க மக்கள் தமது சொந்தமண்ணிலேயே சிறுபான்மையினராக்கப்பட்டனர். அத்துடன் குடியேற்றவாசிகளான 'புரட்டஸ்தாந்து' மதத்தைக் கடைப்பிடித்த ஆங்கிலேயர்களுக்கும், கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஐரிஷ் மக்களுக்கும் இடையில் மதக் கலவரங்களும் உருவாக்கப்பட்டன.

பிரிட்டிசாரின் பிரித்தாளும் தந்திரத்தின் அடிப்படையில் அயர்லாந்தில் வடக்கு, தெற்கு என்ற பேதம் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு அம் மக்கள் மத்தியில் ஒரு நிரந்தரப் பிளவை ஏற்படுத்த ஆங்கிலேயர்கள் முயன்றார்கள். இதனால் வட அயர்லாந்து, தென் அயர்லாந்து என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இரு வேறு பாராளுமன்றங்களும் அமைக்கப்பட்டன. இதற்கூடாக அயர்லாந்துக் குடியரசு திட்டமிட்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளின் வேகம் அதிகரிக்க பிளவுபட்ட அயர்லாந்துக் குடியரசை ஒன்றிணைக்கவேண்டுமென்ற கொள்கையைக் கொண்ட ஐரிஷ் தேசபக்தர்களால் 'ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்கம்' என்னும் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு ஐரிஷ் குடியரசிற்காகப் போராடினர்.

அயர்லாந்தின் தென்பகுதியில் மைக்கேல் காலின்ஸ் பிறந்தான். சிறுவயதிலேயே நாட்டின் அடிமைத்தனத்தை எதிர்த்துப்போராடவேண்டுமென்ற அவாக் கொண்டு வளர்ந்தான். ஆனால், அரச உத்தியோகம் பார்ப்பதற்காக பெற்றோரால் லண்டனுக்கு அனுப்பப்பட்டான். அங்கே தபால் இலாகாவில் வேலைசெய்துகொண்டே இரகசியமாக இயங்கிவந்த 'ஐரிஷ் குடியரசுச் சகோதரத்துவ சங்கத்தில்' இணைந்தான்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய ஆக்கிரமிப்புப் படையாலும், துரோகக் கும்பல்களாலும் படுகொலை செய்யப்பட்ட ஒரு சில தமிழீழமக்களின் பெயர் விபரம்....

| திகதி. | மாவட்டம் | பெயர் | இறந்த இடம் |
|---|---|---|---|
| 01.06.89 | யாழ்ப்பாணம் | விஜயகுமார் | நாவாந்துறை |
| 02.06.89 | திருகோணமலை | சித்திரவேல் சண்முகலிங்கம் | சாம்பல்தீவு |
| " | " | கோபாலபிள்ளை நவரட்ணம் | கள்ளிமேடு |
| " | முல்லைத்தீவு | அல்பிரட் தேவதாஸ் | வட்டுவாகல் |
| 05.06.89 | மட்டக்களப்பு | தவராஜா | பழுகாமம் |
| 06.06.89 | யாழ்ப்பாணம் | ஒருவர்(பெயர் தெரியவில்லை) | தம்பசிட்டி |
| 08.06.89 | " | முரளிதரன் | மானிப்பாய் |
| 09.06.89 | " | விகோர்றி கிறேசியன் (19) | யாழ்ப்பாணம் |
| 10.06.89 | மட்டக்களப்பு | அலியா சியாமத்மாத(65) | ஏறாவூர் |
| " | யாழ்ப்பாணம் | கிருஷ்ணபிள்ளை புஸ்பராஜா | யாழ்ப்பாணம் |
| " | முல்லைத்தீவு | சந்திரராஜா | மாங்குளம் |
| " | வவுனியா | செல்வகுமார் (20) | கூமாங்குளம் |
| " | அம்பாறை | ஒருவர்(பெயர் தெரியவில்லை) | பொத்துவில் |
| 11.06.89 | யாழ்ப்பாணம் | சதாசிவம் (21) | புங்குடுதீவு |
| 12.06.89 | வவுனியா | சுப்பையா நீக்லஸ் (51) | பண்டாரிகுளம் |
| " | " | யோசப் (67) | " |
| " | மட்டக்களப்பு | ஒருவர்(பெயர் தெரியவில்லை) | மட்டக்களப்பு |
| 16.06.89 | கிளிநொச்சி | பாலகிருஷ்ணன் | கோணாவில் |
| 17.06.89 | மட்டக்களப்பு | ஜானன் (24) | புல்லுமலை |
| " | " | வாவு (22) | " |
| 18.06.89 | யாழ்ப்பாணம் | ஆறுமுகம் | புலோலி |
| 22.06.89 | கிளிநொச்சி | ஒருவர் (பெயர் தெரியவில்லை) | பாரதிபுரம் |
| 23.06.89 | யாழ்ப்பாணம் | முருகேஸ் | தெல்லிப்பழை |
| " | அம்பாறை | நெடுஞ்செழியன் (45) | சேனைக்குடியிருப்பு |
| 24.06.89 | மன்னார் | மயிலு மகேந்திரராஜா(16) | அத்தாயி |
| " | யாழ்ப்பாணம் | சிறில் முகாம்பிள்ளை (57) | யாழ்ப்பாணம் |
| " | " | ஒருவர்(பெயர் தெரியவில்லை) | பருத்தித்துறை |
| " | " | ஒருவர்(பெயர் தெரியவில்லை) | யாழ்ப்பாணம் |
| 26.06.89 | மட்டக்களப்பு | வேலு செல்லையா (36) | தோணிக்கல் |
| " | யாழ்ப்பாணம் | இராமநாதன் கணேசகுமார் | யாழ்ப்பாணம் |
| " | " | ஞானதாஸ் (23) | " |
| " | முல்லைத்தீவு | பாலசிங்கம் | முள்ளியவளை |
| 27.06.89 | மட்டக்களப்பு | குமரையா | கொம்மாந்துறை |
| 29.06.89 | முல்லைத்தீவு | கருணாகரன் (35) | செம்மலை |
| " | " | ரேவதி (11) | " |

படிப்பகம்

www.padippakam.com

மாடுகள் அவனை அடையாளம் கண்டு துள்ளிக்குதித்தன. பசுவொன்றின் கால்களுக்கிடையில் சின்னஞ் சிறிய ஓர் கன்று, அதை வாஞ்சையுடன் தடவிக்கொடுக்கும் தாய்ப்பசு.

பழைய ஞாபகங்கள்...கூடவே அம்மாவின் ஞாபகம், மெலிந்து கூடாகிவிட்ட உடல். இடுங்கிய கண்கள். பெயர் சொல்லிக் கூப்பிடாமல் 'ராசா' என்று எப்பவும்போல இப்பவும் அம்மா கூப்பிடுவது போன்றதொரு பிரமை.

"ஈசன்! கனகாலமா நான் வீட்டுப்பக்கம் போகேல்ல. ஒரு ஐஞ்சு நிமிசம் கதைச்சுப்போட்டுவாறன். இதில..கவனமாப் பாத்துக்கொண்டு நில்லுங்கோ...அவங்கள் வந்திடுவங்கள். கூப்பிடு தொலைவில இந்தியன்ர காம்ப்!"

ஈசன் அயலவன், இயக்கத்தின் ஆதரவாளனாகவும் இருப்பவன். நம்பிக்கையுடன் அவனைக் காவலுக்கு நிறுத்திவிட்டு கண்டாயத்தைத் திறந்து உள்ளே போகின்றான் ரமேஷ்.

"என்ர ராசா" பாய்ந்துவந்து அணைத்துக் கொள்கின்றாள் அம்மா.

"இப்பவெண்டாலும் ஞாபகம் வந்துதோ?...ஒவ்வொருநாளும் நெஞ்சில தண்ணியில்லாமல்...நான்..." வாயில் சேலைத் தலைப்பை வைத்து விம்மியவள்.."உள்ளுக்கு வா ராசா!.. ஆரேனும் கண்டினமெண்டாலும்...தனியவே வந்தனி?" ஏம்பலிப்புடன் வினவுகிறாள்.

"இல்லையம்மா! ஈசன் வந்தவன். கொஞ்சம் தள்ளிநிக்கிறான். அது சரி! தங்கச்சி எங்க?.."

ஆவலோடு விசாரிக்கிறான் ரமேஷ்.

மற்றைய எல்லோரையும்விட ஒரு போராளிதான் பாசம், மனிதாபிமானம், நீதி என்பவற்றைப் பெரிதும் மதிக்கின்றான். அதனால்தான் எமது மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து உயிரையே பணயம் வைத்துப் போராடி அம் மக்களின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுகின்றான்.

தாய்ப்பசுவை ஒருநாள் பிரிந்திருக்கக்கூட கன்று மறுக்கும். ஆனால், ஒவ்வொரு விடுதலைப் புலியும் மக்களின் விடுதலைக்காக தாய், தந்தை, சகோதரங்களை எத்தனைகாலம்....

"நீ வெளியில ஈசனை காவலுக்கு நிக்குதெண்டாய். ஆனால், அவன் பொடியனைக் காணேலத் தம்பி!" -

முக்குப்பேணியுடன் தேநீர் கொடுக்கச்சென்ற அம்மா திரும்பி வந்தாள்.

"காணேல்லையோ?"..சற்று யோசித்தவன்.."அங்கால மறைவில நிப்பானம்மா"

அதேநேரத்தில், அருகிலிருந்த இந்திய இராணுவ முகாமில்...
"கிழக்கால இருக்கிற ஒழுங்கேல அந்த ஓலை வீடுதான் சேர்...அங்கே அவன் தனியத்தான்...!"

ஈசன் சொல்லிக்கொண்டிருக்க ஆக்கிரமிப்பாளர்கள் துரிதகதியில் செயற்படுகின்றனர்.

"சாப்பிட்டுட்டுப் போவன் ராசா..எத்தனை நாள் என்னுடைய கையால நீ சாப்பிட்டு...கண்களில் நீர் ததும்பக் கேட்கின்றாள் அம்மா".

"இல்லையம்மா, நான் வேற இடம் போகவேணும். பிறகு ஒரு நாளைக்கு வாறன்" துள்ளியெழும்பிய ரமேஷ் திகைத்துப்போகின்றான். கனமான

22 ம் பக்கம் பார்க்க.


படிப்பகம்

www.padippakam.com

தெருவின் இருமருங்கிலுமிருந்த அடர்காட்டின் பூமான மரக் கொப்புகளைக் காற்று கிழித்துச் செல்லும்போது ஏற்படும் பேரோசையைத் தவிர, வேறு எந்தச் சத்தமும் இல்லை. அநேகமாக அந்தத் தெரு செத்துக் கிடந்தது.

வீதிக்கும், பற்றைக்கும் மாறி மாறி விரைந்து மிதிவெடிவைக்கும் வேலையைத் துரிதகதியில் முடித்துவிட்டு அடர்ந்த பற்றையைப் பிரித்துக்கொண்டு வந்த ரமேஷ் தெருவில் காத்திருந்த ஈசனை அண்மிக்கின்றான். முகத்தில் பூத்த வியர்வை கன்னத்தில் வெள்ளமாய் வழிகின்றது.

மிதிவெடிகள் :- ஆக்கிரமிப்பாளர்களின் அடிமனதைக் கலக்கிடும் விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் ஓர் ஆயுதம்.

"ஏதும் சிலமன் தெரியுதோ மச்சான்? போவமே..?"

"ஒண்டையும் காணேல்ல....போவம்!"

நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான் ரமேஷ். நிலவு இன்னும் மறையவில்லை. போகமாட்டேனென் அடம்பிடித்து முகிற்கூட்டம் ஒன்றின் கையைக் கெட்டியாகப் பற்றியிருந்தது பள்ளிக்குச் செல்லமறுக்கும் ஒரு சிறுமிபோல.

சற்றுத் தள்ளியிருந்த குளம் ஒன்றிலிருந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட நீர்க்கொக்குகள் இதுவரையில் நிலவிய அமைதியைக் குலைத்துக்கொண்டு பறந்தன. அவற்றின் இறக்கைகள் அடிக்கும் சத்தம் 'பட படவென்று' சீராக வானிற் கேட்டது. அதைத் தொடர்ந்து எழுந்த பறவைகளின் கதம்பமான ஒலியும் விடியலுக்குக் கட்டியங்கூறின.

வட்டக்கச்சிக் கிராமம் மெதுவாக விடியத்தொடங்கியது.

சைக்கிளின் முன்பக்கத்தில் தொற்றிக்கொண்ட ரமேஷை உற்றுப் பார்க்கிறான் ஈசன்.

வயது 17 தான் என்று நம்பமறுக்கவைக்கும் உடல்வாகு. கடின வேலைகளால் காய்த்துப்போன கரங்கள். சீராக வாரப்படாத தலை. முகத்தில் தெரியும் தன்னம்பிக்கை. விடுதலைப் புலிகளுக்கேயுரிய, எதையுமே தீர்க்கமாக அலசும் கூர்மையான பார்வை. சேட் கொலரினூடு மறைந்தும் மறையாமலும் தெரியும் சயனைட் குப்பி.

"எப்படி இருக்கும் அந்த இந்தியக் கூலிகளுக்கு? தங்கட முகாமுக்குப் பக்கத்திலேயே இப்படி மிதிவெடி வெடிக்குமெண்டு எதிர்பாராமல், வெளிக்கிட்ட உடனேயே வெடிச்சுச் சிதறப்போகினம். எங்கட நாட்டில வந்து, எங்கட மக்களைக் கொல்லுறவையின்ர உடம்புகூட மிஞ்சக்கூடாது. இதில எங்கட உயிர் போனாலும் பறவாயில்லை"

கழுத்திலிருந்த சயனைட்டை ஒருதடவை தொட்டு ஊர்ஜிதம்செய்துகொள்கின்றன ரமேஷின் கரங்கள்.

சயனைட் :- விடுதலைப் புலிகளின் உன்னதமான ஆயுதம். தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு உயிர்கொடுத்து, உத்வேகம் ஊட்டிக்கொண்டிருக்கும் வீரமறவர்களின் ஆன்மா அது.

# விடுதலைப் பாதையில் 1 நாள்

"ம்..ம்..ஆ.." பசுவொன்றின் கதறல் ரமேஷின் எண்ண ஓட்டங்களுக்குக் கடிவாளமிடுகின்றது. பட்டியில் அடைக்கப்பட்டிருந்த மாடுகள் இவர்களைக் கண்டதும் உற்சாகக்குரல் கொடுக்கின்றன.

"என்ரை பிறந்த இடம்....நான்...வளர்ந்த இடம்"

படிப்பகம்

www.padippakam.com

| திகதி | பெயர் | சம்பவம் |
|---|---|---|
| 26.06.89 | மேஜர் மாறன் | பன்றிக்கெய்தகுளத்தில் இந்தியப்படையினர் பதுங்கித்தாக்கியதில் |
| " | லெப் நித்திலா - (மகளிர் படைப்பிரிவு) | |
| " | லெப் அருள் | " |
| " | சுமன் | " |
| " | மகேந்தி | " |
| " | பெர்பி | " |
| " | அகிலன் | " |
| " | கேசவன் | " |
| " | அச்சுதன் | " |
| " | நவம் | " |
| " | முரளி | " |
| " | விஜயன் | " |
| " | சபா | " |
| " | ரூபன் | " |
| 27.06.89 | லெப் யோக்கின் | அளம்பிலில் இந்தியப்படையினருடன் நேரடி மோதலின்போது |
| " | மதன் | |
| 28.06.89 | கப்டன் அக்பர் | மிருசுவில் பழையவாய்க்காலில் தேசத்துரோகிகள் மீதான தாக்குதலின்போது. |
| 29.06.89 | மேஜர் ரஞ்சன் | நாயாற்றில் இந்தியப்படையினர் மீதான தாக்குதலின்போது. |
| " | 2வது லெப் குமரன் | |
| " | நிஸாம் | " |

## இவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி,
தாங்கொணாத் துன்பத்தின் மத்தியில்
பெறப்படுவதுதான் சுதந்திரம்.

— வே-பிரபாகரன் —

www.padippakam.com

# 1989 ஆனியில் போர்முனையில் உயிர் நீத்த எம் வீரர்கள்......

| திகதி | பெயர் | சம்பவம் |
| --- | --- | --- |
| 03.06.89 | லெப் அந்ரி | அளம்பிலில் இந்தியப் படையுடன் |
| | | ஏற்பட்ட நேரடி மோதலில், |
| 05.06.89 | கப்டன் நேரு | புத்தூரில் இந்தியப் படையுடன் |
| " | குட்டி | ஏற்பட்ட நேரடி மோதலில். |
| " | லெப் சங்கிலி | வரணியில் இந்தியப் படையுடன் |
| " | 2வது லெப் கர்ணன் | ஏற்பட்ட நேரடி மோதலில், |
| " | ஆசாத் | " |
| " | உமைநேசன் | " |
| " | பாலன் | மட்டுவிலில் இந்தியப் படையினர் |
| | | சுற்றிவளைத்துத் தாக்கியபோது. |
| 06.06.89 | ராஜன் | தம்பசிட்டியில் இந்தியப் படையினர் |
| | | தனிக்கியபோது சயனைட் உட்கொண்டு |
| 14.06.89 | ஜேக்கப் | வட்டக்கச்சியில் தேசத் துரோகிகள் |
| " | 2வது லெப் தாஸ் | தாக்கியபோது. |
| 14.06.89 | லெப் கதிரவன் | பழைய முருகண்டியில் இந்தியப்படை |
| | | யினர் மீதான தாக்குதலின்போது. |
| 19.06.89 | சண் | திருநெல்வேலி கொலனியில் இந்தியப் |
| " | கண்ணாடி | படையினருடன் ஏற்பட்ட மோதலில். |
| " | 2வது லெப் புவிராஜ் | திருமலை 3ம் கொலனியில் இந்தியப் |
| | | படையினருடன் ஏற்பட்ட மோதலில். |
| 21.06.89 | நித்தி | மொறக்கொட்டாஞ்சேனையில் இந்தி |
| | | யப்படையினர் பதுங்கித் தாக்கியதில். |
| " | கப்டன் சுதா | மரக்காரம்பளையில் இந்தியப் படை |
| " | வெனா | யுடன் ஏற்பட்ட நேரடி மோதலில். |
| " | வாவா | மொறக்கொட்டாஞ்சேனையில் இந்தி |
| | | யப்படை பதுங்கித் தாக்கியபோது |
| | | சயனைட் உட்கொண்டு, |
| " | லெப் செந்தூரன் | கொந்தக்காரன்குளத்தில் இந்தியப் |
| " | சிவா | படையினர் தாக்கியபோது. |
| " | கார்த்திக் | " |
| " | ராமகிருஷ்ணன் | " |
| " | புட்டோ | " |
| " | அரசன் | " |
| 22.06.89 | பிரகாஷ் | தென்னமரவடி சிறிபுரத்தில் சிறி |
| | | லங்காப்படை பதுங்கித்தாக்கியதில் |
| 24.06.89 | லெப் டானியல் | திருநகரில் இந்தியப்படையினருடன் |
| | | ஏற்பட்ட நேரடி மோதலில். |

www.padippakam.com

அமைதிப்படை எனும் போர்வையில் எமது மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தவந்த இந்திய அரசின் வஞ்சகநோக்கத்தை எமது மக்களுக்கும், உலகத்திற்கும் காட்டுவதற்காக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் திலீபனுடன் வன்னிப்பிராந்தியத்தில் தன்னையே இயக்கம் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று மாறன் விரும்பினான். ஆனால் எமது இயக்கம் கப்டன் திருச்செல்வத்தைத் தேர்ந்தெடுத்தது. இருந்தாலும் சளைக்காது அந்த உண்ணாவிரதப்போராட்டத்தை தானே முன்னின்று நடாத்தி, மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வை உண்டாக்கப் பாடுபட்டான்.

பின்னர், இந்திய ஆக்கிரமிப்பாளர்களுடனான யுத்தகாலகட்டத்தில் எமது கருத்துக்களையும், உண்மைச்செய்திகளையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக எமது இயக்கத்தால் வெளியிடப்படும் 'உணர்வு', 'சுதந்திரப்பறவைகள்' ஆகிய பத்திரிகைகளின் உருவாக்கத்திற்கும், அவற்றை மக்களிடம் கொண்டு செல்லவும் மாறன் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண் போராளிகளுடைய பங்கின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அவர்களை அணிதிரட்டவேண்டிய அவசியத்தைப்பற்றியும் அடிக்கடி வலியுறுத்திக் கூறுவதுடன் அவைகளுக்கு செயல்வடிவமும்கொடுத்துள்ளான்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப்பிராந்தியத்தில் பெண்களுக்கிடையில் அரசியல்ரீதியான விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணி எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் அவர்களையும் பங்கு கொள்ளவைக்கு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளான். இவ்வாறாக விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டுசென்று சரியான முறையில் செயற்படுத்திய வேலைத்திறனும், மக்கள் மீது குறிப்பாக சமூக ஒடுக்குமுறைகளுக்குள்ளாகிய மக்கள் மீது மாறன் காட்டிய நேசமும் அவனை வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளனாக உயர்த்தியது.

அப் பாரிய பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டு "சிறிது காலத்துக்குள்ளேயே மரணத்தைத் தழுவிக்கொண்டது வன்னிப்பிராந்திய மக்களுக்கு ஏற்பட்ட பெரியதொரு இழப்பாகும்."

26.06.89 அன்று வவுனியா மாவட்டத்திலுள்ள பன்றிக்கெய்த குளம் என்னும் இடத்தில் வன்னிப்பிராந்திய அரசியற் பொறுப்பாளர் மேஜர் மாறன் உட்பட லெப். நித்திலா (மகளிர் படைப்பிரிவு), லெப். அருள், சுதன், மகேந்தி, சபா, பொபி, அகிலன், கேசவன், அச்சுதன், நவம், விஜயன், முரளி, ரூபன் ஆகிய பதின்னான்கு விடுதலைப் புலிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்கள்.

சிறிலங்கா—இந்திய ஆக்கிரமிப்பாளர்களை எம்- தாய் மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் முயற்சியில் களப்பலியான 1214 விடுதலைப் புலிகளின் இலட்சிய உறுதி சுதந்திரத்தின் பெறுமதியை எமக்கெல்லாம் உணர்த்திநிற்கின்றது.

---**. *. **---

மேஜர் மாறனைப்பற்றிய பூரணமான தகவல்களைத் திரட்டுவதற்காக. அவருடன் பழகிய மக்களாகிய உங்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், ஆக்கபூர்வமான கருத்துக்கள் மற்றும் அவருடனான உங்களது அனுபவங்கள், மறக்க முடியாத சம்பவங்களைத் திரட்டி எமக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com

கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப் பாளனாக இருந்தபோது மக்கள் மீது அவன் வைத்திருந்த நேசமும், அக்கறையும் அவனை ஒரு சிறந்த போராளியாக மக்கள் மத்தியில் வெளிக்காட்டியது.

சமூகரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் கிராமங்களே மாறனின் கவனத்தை விசேடமாக ஈர்த்தன. அம் மக்க ளின் நல்வாழ்விற்காக மாறன் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்கள வெறியர்களின் காடைத்தனங்களால் தமது சொந்தக் கிராமங்களை விட்டு அகதிகளாகத் துரத்தப்பட்ட தமிழ் மக்களிற்கு ஒரு பாதுகாப் பான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் விடுதலைப் புலிகளின் செயற்திட்டங்களுக்கு சரியானமுறையில் மாறன் செயல்வடிவம் கொடுத்தான்.

குடிதண்ணீர் இல்லாது துயருற்ற கிராமமக்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு ஊக்கமுகொடுத்து, அவர்களைக்கொண்டே கிணறுகளை வெட்டுவித்தான். விவசாயம் செய்வதற்கான ஆரம்பமுதலீடு இல்லாது அவதியுற்ற மக்களுக்கு விதைநெல் லையும், உரங்களையும் வழங்கி அம் மக்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பாடுபட்டான்.

நெடுங்கேணிப் பகுதியிலுள்ள அகதிமுகாம்களில் வாழ்ந்துவந்த குழந்தைகளுக்கென ஓர் ஆரம்பப்பாடசாலையை நிறுவி, சில ஆசிரியர்களையும் நிய மித்து, அம் மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கி, சுமார் 150 பாடசாலை மாண வர்களுக்கு ஆரம்பக்கல்வியைப் பெற்றுக்கொடுக்க மாறன் எடுத்த முயற்சிகள் இன்றும் அம் மக்களால் நினைவுகூரப்படுகின்றது. அத்துடன் தமிழின அழிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, எல்லாவற்றையும் இழந்து வன்னிப்பிரதேசத்தில் அகதிகளாக வந்து தஞ்சமடைந்தநிலையில் கல்விகற்க வசதியில்லாதிருந்த ஏழை மாணவர்களுக்கு புத்த கங்கள், அப்பியாசக்கொப்பிகள், பென்சில்கள், பேனைகள் என்பவற்றை சக மாண வர்களிடமிருந்தே சேகரித்து, அவர்களுக்கு வழங்கி அந்த ஏழை மாணவர்களைத் தொடர்ந்து கல்விகற்கவைத்தான்.

மேலும், மக்களுக்கிடையில் ஏற்படும் சாதாரண பிரச்சனை களை சரியான கோணத்திலிருந்து அணுகி, அதைத் தீர்த்துவைக்க மாறன் கையாளும் அணுகுமுறைகள் மக்கள் மத்தியிலிருந்த அவனது மதிப்பை மேலும் உயர்த்தியது. எந்தப் பிரச்சனைகளானாலும் அவற்றைத் தீர்த்துவைக்க முற்படும்போது அப் பிரச்சனைகளின் தோற்றம், அதற்கான காரணங்கள், அக் காரணிகளைத் தோற்றுவிக்கும் சமூகப் பின்னணி என்பவற்றை ஆராய்ந்த பின்பே தீர்வுகளை வழங்குவான்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், விடுதலைக்கெ னப் புறப்பட்டு பிழையான தலைமைகளால் வழிநடாத்தப்பட்டு, திசைமாறி சமூக விரோதசக்திகளாகிய சில இயக்கங்களால் மக்கள் அநாவசியமான துன்புறுத்தல்க ளுக்குள்ளானார்கள்.

1985ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் இத்தகைய மக்கள்விரோத நோக்கம்கொண்ட இயக்கங்களின் அத்துமீறிய செயல்கள் இடம்பெற் றன. இவைகளிற்கு ஓர் தீர்வுகாணப்படவேண்டும் என்று மக்கள் விடுத்த வேண்டுகோ ளுக்கிணங்க சம்பந்தப்பட்ட சகல இயக்கங்களையும் அழைத்து, அவர்கள் புரிந்த மக் கள்விரோதச் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டி மீண்டும் அவைகள் நடைபெறாது பார்க்க பலதடவைகள் முயன்றவன் மாறன். ஆனால், அவனது முயற்சிகள் அச் சமூக விரோதச் சக்திகளினால் தோற்கடிக்கப்பட்டன.


படிப்பகம்

www.padippakam.com

# மேஜர் மாறன்

## சின்னத்துரை சுகுமாறன்

23-06-1960 ———— 26-06-1989

வவுனிக்குளம்...

.....கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்...

.....கிளிநொச்சி மாவட்டம்...

.....வன்னிப்பிராந்தியம்...

.....பன்றிக்கெய்தகுளம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இறுதிவரை எதிர்த்து நின்று போராடி வீரவரலாறு படைத்த தமிழ் மன்னன் பண்டாரவன்னியனால் பெருமைப்படுத்தப்பட்ட இராச்சியம்தான் வன்னிப்பிரதேசம்.

காடுகளும், குளங்களும், விளைநிலங்களும், காட்டுவிலங்குகளும், மந்தைகளும் இம் மண்ணின் செல்வங்கள். இத்தகையதொரு இயற்கை எழில்கொஞ்சும் விவசாயக் கிராமமான வவுனிக்குளம்தான் சுகுமாரன் எனும் இயற்பெயர் கொண்ட மேஜர் மாறன் பிறந்த ஊர்.

சிறுவயதிலேயே ஒழுக்கமும், இரக்கசுபாவமுமுடைய இவன் ஆரம்பக் கல்வியை பிறந்த ஊரிலேயே முடித்துக்கொண்டு உயர்வகுப்புப்பயில கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டான். அப் பாடசாலையின் உயர்வகுப்பில் கல்விகற்கும்பொழுது மாணவர் மன்றத்தின் தலைவராக இருந்த மாறன் சக மாணவர்களின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றுக்கொண்டான்.

தமிழ்பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி நயவஞ்சகமாக தமிழின விரோதச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தி ஓர் இன அழிப்பு நடவடிக்கையில் சிங்கள அரசுகள் இறங்கியிருந்த அக்-காலகட்டத்தில், தனது பாடசாலை மாணவர்கள் மத்தியில் அரசியல்ரீதியான விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்த மாறன் பல வழிகளை மேற்கொண்டான்.

கலைநிகழ்ச்சிகளிற்கூடாகவும், கட்டுரைவடிவங்களிலும், கிராமங்கள்தோறும் பிரச்சாரம் செய்து மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணினான்.

அத்துடன் சிங்கள இனவாதத்தின் அடக்குமுறைக்குட்பட்ட நிலையிலும் தமிழர்கள் மத்தியில் தலைதூக்கிக்கொண்டிருந்த சாதிக்கொடுமைகளுக்கு எதிரான கருத்துக்களை மக்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கினான்.

சிங்கள இனவாதப் பிடியிலிருந்தும், பிற்போக்குத் தமிழ்த்தலைமைகளிடமிருந்தும் எமது சமூகம் விடுவிக்கப்பட்டு ஒரு புரட்சிகரத் தலைமையினால் வழிநடத்தப்படும்போதுதான் இத்தகைய சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சமூக ஒடுக்குமுறைகளையும் களைந்தெறியமுடியும் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கையை எடுத்துக்கூறிய மாறன் 1983ம் ஆண்டின் முற்பகுதியில் தன்னையும் இணைத்துக்கொண்டான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பல புலிகளை உருவாக்கிக்கொடுத்த பெருமை, கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தையே சேரும். அப்பாடசாலை உருவாக்கிய போராளிகளில் பலர், முத்தவனாகிய மாறனாலேயே உருவாக்கப்பட்டார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய போக்குகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது ஊரிலும் இத்தகைய ஒழுக்கச் சீர் கேட்டை ஊக்குவிக்கக்கூடிய களியாட்டங்களைக் கண்காணித்து நெறிப்படுத்தவேண்டிய பணி பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், சமூகத்தின் மூத்த உறுப்பினர்களையுமே சாரும்.

பாடசாலைகள், தனியார் கல்விநிலையங்கள், கோவில் திருவிழாக்கள், சடங்குகள், வேலைத்தளங்கள் எதுவானாலும் அங்கு நடப்பவைகளை உன்னிப்பாக அவதானித்து நெறிப்படுத்துங்கள். முடியாவிட்டால் அத்தகைய நபர்களை, அதற்குக் காரணமானவர்களை அம்பலப்படுத்துங்கள்.

ஒவ்வொரு தமிழீழப் பிரஜையின் விழிப்புணர்ச்சிக்கூடாக வெற்றியை நோக்கி வீறுநடைபோடும் தமிழீழ விடுதலைப் போரை- இன்னும் வளர்த்துச் சென்று எதிர்கால சமூகத்திற்கு ஒரு உன்னதமான விடுதலையையும், உயர் ஒழுக்கத்தைப் போதிக்கும் எமது கலாச்சாரத்தையும் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைப்போம். அதுதான் இன்றைய ஒவ்வொரு தமிழீழப் பிரஜையினதும் கடமையாகும்.

-----** * **-----

(29ம் பக்கத் தொடர்ச்சி.....)

சப்பாத்துக்களின் கீழ் சருகுகள் நொருங்கும் சப்தம். அந்த ஒலி வீட்டு வாசலை நோக்கி விரைந்துவருகிறது. திரும்பி செத்தைக்கூடாகப் பார்க்கின்றான். கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் தலைக்கவசங்கள். அவனையே குறிவைக்கும் துப்பாக்கிகள்.

"அவன் பொடியனைக் காணேல்லத் தம்பி"அம்மா சொன்னதன் அர்த்தம் இப்போது விளங்குகின்றது.

எம்மினத்துக்குள்ளேயே இருந்து எம்மினத்தவரையே கொல்லத் துணைபோகும் துரோகிகள்...அவர்களின் ஒரு உளவாளி இவன்.

தப்ப இடமுமில்லை...நேரமுமில்லை.

போராடுகிற எவருக்கும் கிடைக்காதபேறு எனக்குத்தான் கிடைக்கப்போகுது...தீர்மானிக்கின்றான்.

"அம்மா உங்கட மடியில படுக்கப்போறன்"

திக் பிரமையடைந்த நிலையில் ரமேஷின் தாய்...மடியில் மகன். கண்ணாடி நொருங்கும் சத்தம் கேட்கவும், இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் வாசலுக்கு வரவும் சரியாக இருந்தது.

உடைந்த சயனைட் குப்பியினொரு சிறுபகுதி கயிற்றுடன் கழுத்தில் தொங்க.. வாயெல்லாம்...நீலம் பாரித்து மீளாத்துயிலில்....

போர்க்களத்திற்கு மகனை உச்சிமுகர்ந்து அனுப்பிவைத்த புறநானூற்று வரலாறு அன்று. வீரமகனின் உடலை தனது மடியில் தாங்கிக்கொண்ட வீரத்தாயின் சோகவரலாறு இன்று.

"ஐயோ...! ஓ...! என்ரை ரா..சா..!! மார்பிலடித்துக் குளறும் அந்த அபலைத்தாயின் ஓலம்..அந்த ஆக்கிரமிப்பாளர்களைத் தாண்டி மெல்ல...மெல்ல...அந்த ஊரை நிறைக்கலாயிற்று.

-----** * **-----

**உணர்வு** சம்பந்தமான அபிப்பிராயங்களையும், ஆக்கங்களையும் உங்களிடமிருந்து வரவேற்கின்றோம்.

படிப்பகம்

போது அக் கொண்டாட்டத்திற்குரிய குழந்தையைக் காட்டுவதைவிட அந்த வீட்டிலுள்ள தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, சோபாசெற், ரேப்ரெக்கோடர், முள்ளுக்கரண்டி ......என்று ஆடம்பரமான வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பொருட்களே அந்த ஒளிபரப்பில் முக்கிய இடத்தைப் பிடிக்கும்.

இதனைப் பார்க்கும் மக்களின் மனங்களில் தவறான எண்ணங்களே உருவாகும். குளிர்சாதனப்பெட்டி, சோபாசெற், முள்ளுக்கரண்டி ஆகியவற்றுடன் வாழ்வதுதான் வாழ்க்கை, அவைகள் இல்லாதுவிடின் நமது அந்தஸ்திற்குப் பங்கம் ஏற்படுகின்றன எனக் கருதத்தொடங்குகிறார்கள்.

மேலும் ஒரு இளம் பெண்ணின் பூப்புனித நீராட்டுவிழா தொடர்பான நிகழ்ச்சியை ஒளிபரப்பும்போது அப் பெண்ணை விரசமான கோணங்களிலிருந்து படமாக்கி அதை ஒளிபரப்புகின்றார்கள்.

இதனால் ஒரு பெண்ணின் பருவமாற்றம் தொடர்பான பாரம்பரியச் சடங்கு ஒன்று விரசமாகக் காட்டப்படுகின்றது. இது பார்ப்பவர்களின் மனதில் கீழ்த்தரமான எண்ணங்களையே தோன்றச்செய்யும்.

இத்தகைய முறைதவறிய நடவடிக்கைகளால் எமது கலாச்சாரம் பாதிக்கப்படும் நிலையிலுள்ளது. இக் கலாச்சாரச் சீர்கேடுகள் பெரும்பாலும் நகர்ப்புறத்திலும், நகர்ப்புறத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

இவைகள் தொடர்பாக சில பெற்றோர்கள் ஒரு சரியான கண்ணோட்டத்துடன் பார்க்கமறுக்கின்றனர்.

தமது மகளின் சடங்கு ஒன்று ஏனையோரும் பார்க்கும்படி ஒளிபரப்பப்படுகின்றது என்று மகிழ்ச்சி அடைகின்றார்களேயல்லாமல் தமது மகளின் சடங்கு விரசமான முறையில் படம்பிடிக்கப்பட்டு, அது மற்றவர்களின் மலின ரசனைக்கு தீனியாகக் கொடுக்கப்படுகின்றது" என்ற உண்மையை உணரவேண்டும்.

அத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் காரணமாக இளைஞர்கள் மத்தியில் போதைவஸ்துப் பாவனையும், ஆபாசப் படச்சுருளின் (புளு பிலிம்) புழக்கமும் அதிகரித்துள்ளன. "இப் பழக்கங்களுக்கு இன்று பாடசாலை மாணவர்களில் கணிசமானோர் அடிமையாகியுள்ளனர்" என சமீபத்திய பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் மாணவர்களின் கல்வியும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு யுத்தகாலகட்டத்தில் ஆக்கிரமிப்பாளனும், இத்தகைய ஒழுக்கச்சீர்கேடுகளைப் புகுத்த நேரடியாகவும், மறைமுகமாகவும் முயலுவான். அவ்வொழுக்கச் சீர்கேட்டிற்கூடாக எமது கலாச்சாரத்தின் சாரத்தைச் சிதைத்து எமது இளைஞர்கள், யுவதிகளின் சிந்தனைகளைப் போராட்டத்தின் பக்கமிருந்து திசைதிருப்பி எமது விடுதலைப் போராட்டத்தை வேரோடு களைய எதிரி முனைந்துகொண்டிருக்கின்றான்.

உதாரணத்திற்கு, முல்லைத்தீவு நகரிலுள்ள கடைகளுக்கு ஆபாசப் படச்சுருள்களை இந்திய இராணுவத்தினர் விநியோகித்து விற்கும்படி கட்டாயப்படுத்துகின்றனர். அத்துடன் நகருக்கு வரும் மக்களையும் அதை வாங்கும்படி நிர்ப்பந்திக்கின்றார்கள். இதேபோல் தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்பாளர்களும், துரோகக்கும்பல்களும் சேர்ந்து எமது மக்கள் மத்தியில் ஒழுக்கச்சீர்கேடுகளைத் திணிக்கின்றார்கள்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

விழாக்களை நடாத்தும் மனிதர்களுக்கிடையே ஏற்படும் போட்டிகளில் வெற்றியைத் தீர்மானிப்பவை இவ்வகையான ஒழுக்கச்சீர்கேட்டை உருவாக்கும் நிகழ்ச்சிகளே என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்வோம்.

இத்தகைய நிகழ்ச்சிகளில் எந்தவிதமான கலையம்சமும் இருப்பதில்லை. மாறாக மனிதனிலுள்ள மிருக உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஒரு கருவியாகவே இது பயன்படுகின்றது. இக் கேளிக்கை நிகழ்ச்சிகளின் கட்டுப்பாடற்ற வளர்ச்சிகளினால் எமது கலாச்சாரம் புறக்கணிக்கப்பட்டு ஒரு ஒழுக்கச்சீர்கேடான சமூகம் உருவாக அவைகள் உந்துசக்தியாக உள்ளன.

மேலும் விருந்துகள், உபசாரச் சடங்குகள், ஒன்றுகூடல்கள், ராகிங் போன்ற அர்த்தம் நிறைந்த செயல்வடிவங்கள் பிழையான கையாள்கையாலும், அவற்றைத் தவறாக விளங்கிக்கொண்டதாலும் அந்த நிகழ்ச்சிகளின் உண்மையான நோக்கம் கெடுக்கப்பட்டு ஒழுக்கச்சீர்கேட்டைப் புகுத்தவே அவைகள் பயன்படுத்தப்படுகின்றன.

காலத்தின் மாற்றத்திற்கேற்ற விதத்தில் வேலைத்தளங்களிலும், கல்விச்சாலைகளிலும், குறிக்கோள்களுக்காக ஒன்றுபட்டவர்களும் பிரியும் வேளை அல்லது ஒரு மகிழ்ச்சிகரமான சம்பவத்தைக் கொண்டாடும் வேளைகளிலோ, அல்லது ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி விசாலமான பார்வைகளை சகலருக்கும் கொடுக்க இத்தகைய நிகழ்ச்சிகள் உதவும் என்பது உண்மைதான்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் ஒரு உன்னதமான குறிக்கோள்கள் உண்டு. அப்படியிருந்தபொழுதிலும் இதற்கு மாறாக விருந்துகள் என்றவுடன் மதுவில் தொடங்கி டிஸ்கோ நடனத்துடன் முடிக்கவேண்டும் என்றும், ராகிங் என்றவுடன் அங்கசேஸ்டைகள் உள்ளிட்ட விரசமான சம்பாசணைகளாக இருக்க வேண்டும் என்ற தவறான நடைமுறைகளாலும் அவற்றின் உண்மைத்தாற்பரியம் கெடுக்கப்பட்டு, சமூகத்திற்குத் தீங்குவிளைவிக்கக்கூடிய பழக்கவழக்கங்கள் புகுத்தப்படவே மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

இத்தகைய களியாட்டங்களை ஒரு அந்தஸ்திற்குரிய செயலெனக் கருதும் சாதாரண பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளை தாராளமாக இந்த நிகழ்ச்சிகளுக்கு அனுமதிக்கின்றார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமாகச் சிந்திக்கும் உரிமை உண்டு. சுயமாகச் செயற்படும் உரிமையும் உண்டு. ஆனால் சமூகக்கட்டமைப்பின் ஒழுக்கவிதிகளை எழுந்தமானமாக மாற்றமுடியாது. அதற்கூடாக சமூக அமைப்பின் சரியான வளர்ச்சிப்பாதையைத் திசைதிருப்பக்கூடியவிதத்திலும், அச் சமூகத்திலுள்ள தனி மனிதர்களின் எண்ணங்களில் சமூக ஒழுக்கத்திற்குத் தீங்குவிளைவிக்கக்கூடிய கருத்துக்களை விதைப்பதற்கூடாக எமது சமூகம் பிழையான சிந்தனைகளுடன் வளரமுனைவதை மக்கள் அனுமதிக்கக்கூடாது.

அறிவியலில் அபரிமித முன்னேற்றம்கண்ட இன்றைய உலகில் மனித வாழ்வின் ஒவ்வொரு சம்பவங்களும் ஞாபகச்சின்னங்களாகப் பாதுகாத்துவைப்பதற்காகவும் வீடியோவில் பதிப்பது வழக்கம்.

ஆனால், இன்று சில நகர்ப்புறங்களில் தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களிலிருந்து பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, திருமண விழா போன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்காக தயாரிக்கின்றார்கள்.

படிப்பகம்

# சமூகச் சீர்கேடுகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள்

www.padippakam.com

மனிதன் என்பவன் ஒரு வரைமுறைக்குட்பட்ட ஒழுக்கவிதியைப் பின்பற்றி, மனிதப்பண்புகளை மதித்து வாழவேண்டிய கடமையைக் கொண்டிருக்கின்றான்.

உலகில் ஒவ்வொரு பகுதிகளிலும் வசிக்கும் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட பழக்கவழக்க நடைமுறைகள் உண்டு. ஆனால், ஒருபகுதி மக்களால் கைக்கொள்ளப்படும் பழக்கவழக்க நடைமுறைகள் இன்னொரு பகுதி மக்களால் கைக்கொள்ளப்படுவதில்லை. இது அந்தப்பகுதி மக்களின் வாழ்க்கைநிலைகளை அடியொற்றி எழுந்த கலாச்சாரத் தனித்துவங்களுடன் சம்பந்தமுடையது.

கீழைத்தேய நாடுகளென அழைக்கப்படும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் பல நூற்றாண்டுகாலமாக மேலைத்தேய நாடுகளின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்து வந்ததனால் மேலைத்தேய பழக்கவழக்கங்களின் தாக்கம் எமது மக்கள் திரளின் ஒரு பகுதியினரிடையே வேரூன்றியது.

அத்தகைய மேலைத்தேய பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ள முயல்பவர்கள் உயர்ந்த அந்தஸ்துக்குரியவர்கள் என்றும், அதுதான் நாகரிகம் என்றும் ஒரு பிழையான அபிப்பிராயம் எமது மக்களில் கணிசமான பகுதியினரிடம் உண்டு.

இது எஜமான்—அடிமை உறவுமுறையின் வெளிப்பாட்டையே ஞாபகமூட்டுகின்றது. அதாவது எவ்வளவுதான் மோசமான, ஒழுக்கக்கேடான விடயங்களை ஒரு எஜமான் செய்துகொண்டுவந்தாலும் அதுதான் உயர்ந்த பண்பாடு எனக் கருதும் ஒரு அடிமையின் மனோபாவத்தை ஒத்ததுதான் மேற்குறிப்பிட்ட உணர்வுகள்.

முதலில் இத்தகைய மனோபாவங்கள் எமது மக்களின் மனங்களில் இருந்து அகற்றப்படவேண்டும்.

எமது வாழ்க்கைமுறைக்கு ஒத்துவராத சில பழக்கவழக்கங்களும், நடைமுறைகளும், மற்றும் மேலைத்தேய கலைவடிவங்களிலிருந்து திரிபடைந்து வர்த்தக நோக்கில் புழக்கத்திற்குவந்த சில விரசமான கேளிக்கை நிகழ்ச்சிகளும் கலைவடிவம் என்னும் பெயரில் எமது மக்கள் மத்தியில் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

பிரேக் நடனம், டிஸ்கோ நடனம் என்ற விரசமான அங்க அசைவுகளைக்கொண்ட கேளிக்கை நிகழ்ச்சிகளை எமது இளம் சந்ததியினரும், சிறுவர்களும் தமது பெற்றோர்களுடன் அமர்ந்திருந்தே இவற்றைப் பார்த்து ரசிக்கின்றனர். இதனால் இவைகள் ஒரு பிழையான அம்சங்களென அவர்கள் கருதமாட்டார்கள். அவைகள் உன்னதமான கலையின் வடிவங்கள் என்ற கண்ணோட்டத்துடன் பார்ப்பதற்கூடாக ஒரு ஒழுக்கக்கேடான பண்பாடு ஒன்று எமது இளைஞர்கள் மத்தியில் வேரூன்றுவதற்கூடாக எமது உன்னதமான கலாச்சாரத்தில் சீரழிவை ஏற்படுத்த முனைகின்றது.

இத்தகைய கேளிக்கை நிகழ்ச்சிகள், இன்று கோவில் திருவிழாக்களின்போதும், பாடசாலை நிகழ்ச்சிகளின்போதும், சடங்கு சம்பிரதாயங்களின் போதும் ஒரு முக்கியமான நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன.

---


படிப்பகம்

| திகதி | திருகோணமலை | மட்டக்களப்பு | கிளிநொச்சி | மன்னார் |
| --- | --- | --- | --- | --- |
| 14.06.89 | | - | பழையமுருகண்டியில் | |
| 17.06.89 | | புல்லுமலையில் | | |
| 19.06.89 | திருமலை, 3ம்-கொலனியில் | தோணிதாட்ட-மடுவில் | | |
| 23.06.89 | | | இரணைமடுவில் | |
| 24.06.89 | | | திருநகரில் | |
| 26.06.89 | | மாவிலில் | | |
| 27.06.89 | | கருவல் கேணியில் | | |

www.padippakam.com

## மாவட்டரீதியாக இந்திய இராணுவத்தினரின் இழப்பு-(1989- ஆனிமாதத்தில்..)

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக எம்மால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களின்போது அவர்களுள் 105பேர் உயிரிழந்தனர். 41பேர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 23 இந்திய இராணுவத்தினரும்,
வவுனியா மாவட்டத்தில் 02 இந்திய இராணுவத்தினரும்,
அம்பாறை மாவட்டத்தில் 18 இந்திய இராணுவத்தினரும்,
முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 இந்திய இராணுவத்தினரும்,
திருகோணமலை மாவட்டத்தில் 04 இந்திய இராணுவத்தினரும்,
மட்டக்களப்பு மாவட்டத்தில் 06 இந்திய இராணுவத்தினரும்,
கிளிநொச்சி மாவட்டத்தில் 22 இந்திய இராணுவத்தினரும் உயிரிழந்தனர்.

## இந்திய இராணுவத்திடமிருந்தும் தேசத் துரோகிகளிடமிருந்தும்.....

| | | |
| --- | --- | --- |
| பிறென் எல் எம் ஜி | - | 04 |
| கால்கஸ்ரோ | - | 01 |
| ஜி-3 | - | 07 |
| ஏ கே -எம் எஸ் | - | 07 |
| எஸ் எல் ஆர் | - | 18 |
| எஸ் எம் ஜி | - | 08 |
| கைத்துப்பாக்கி(பிஸ்ரல்) | - | 01 |

ஆகிய 46 ஆயுதங்கள் எம்மால் கைப்பற்றப்பட்டன.

---** * **---

*** குறிப்பு

சென்ற உணர்வின் சில பிரதிகளிலுள்ள (உணர்வு-9)பின் அட்டையில் சிவகுமாரனது 13வது நினைவுதினம் எனப் பிழையாக அச்சடிக்கப்பட்டுள்ளது. 15வது நினைவுதினம் என்பதே சரியானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# போர் முனையில் புலிகள்



89 ஜூன் மாதத்தில் தமிழீழப் பகுதி எங்கும் எமது தாக்குதல்கள்...........

| திகதி | யாழ்ப்பாணம் | வவுனியா | அம்பாறை | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|
| 03.06.89 | – | | | அளம்பிலில் |
| 05.06.89 | புத்தூரில் | | | |
| " | வறணியில் | | | |
| " | மட்டுவிலில் | | | |
| 07.06.89 | | பன்றிக்கெய்த-குளத்தில் | | |
| 08.06.89 | | மடுக்குளத்தில் | ஒலுவிலில் | |
| 14.06.89 | | பண்டாரிக்-குளத்தில் | | |
| 17.06.89 | குருநகரில் | | | |
| " | மாவிட்ட-புரத்தில் | | | |
| " | தெல்லிப்-பழையில் | | | |
| 18.06.89 | அரியாலையில் | | | |
| 19.06.89 | திருநெல்வேலி-யில் | | | |
| " | அளவெட்டியில் | | | |
| 20.06.89 | பருத்தித்து-றையில் | | கஞ்சிகுடிச்-சானாறில் | |
| " | | | நிந்தவூரில் | |
| 21.06.89 | திருநெல்வே-லியில் | மரக்காரம்-பளையில் | கஞ்சிகுடிச்-சானாறில் | |
| " | | கொந்தக்கா-ரன்குளத்தில் | | |
| 22.06.89 | | கனகராயன்-குளத்தில் | | முல்லைத்தீவு-நகரில் |
| 24.06.89 | மந்திகையில் | | | |
| 25.06.89 | மந்திகையில் | | | |
| 26.06.89 | | | | அளம்பிலில் |
| 27.06.89 | முனையில் | வவுனியா நகரில் | கஞ்சிகுடிச்-சானாறில் | அளம்பிலில் |
| 28.06.89 | மிருசுவிலில் | | தங்கவேலாயுத-புரத்தில் | |
| " | கொக்குவிலில் | | | |
| 29.06.89 | கொக்குவிலில் | | பொத்துவிலில் | |


படிப்பகம்

www.padippakam.com

இவர்களில் மோதுவதால்தான் அந்தச் செல்கள் வெடித்துச் சிதறுகின்றனவோ.....
என் மூதான் எண்ணத்தோன் றுகிறது.....

அவள் உறங்கிவிட்டாள். வீட்டின் மூலையில் தனித்து விடப்பட்டிருந்த விளக்கின் சிறிய மின்மினி வெளிச்சம் வீட்டினுள் உறங்கிவிட்ட இருளை வெளியேற்றிவிடப் போராடிக்கொண்டிருந்தது. அந்த மின்மினி வெளிச்சத்தில் இரண்டு விழிகள் முகட்டைப் பார்த்தபடி பளபளத்துக்கொண்டிருந்தன.

பாபு...... அவன் கையிலிருந்து நிறைய இரத்தம் கொட்டிவிட்டது. இனி...... அவன் ஒற்றைக்கையால்தான் துவக்கைத் தூக்கிச் சுடமுடியும்... ...ஆனாலும்கூட...... அந்தச் செஞ்சூரியனின் உறுதி...... மலைகளின் உறுதி..... வளரவேண்டும்...... இந்த மலைகள் நிறையவே வளரவேண்டும்... அந்நியனின் அகந்தையும் இதில் மோதி நொருங்கவேண்டும்...... சுக்குநூறாகவேண்டும்!!..... பளிச்சிடும் அந்த விழிகள் சிந்தனைவயப்பட்டிருந்தன. உலர்ந்து ஒட்டியிருக்கும் உதடுகளும், காற்றை உள்ளிழுத்து விம்மித்தணியும் மார்புங்கூட மௌனமாக இதைத்தான் உச்சரித்துக்கொண்டிருந்தன.

** * **

உச்சிவெயில் உள்ளங்காலுக்குள் கொள்ளியைச் சொருக... ..உடல் கொதிக்க...... வெங்காயம் விற்றுமுடிந்து வெற்றுச்சாக்கை ஒரு கையிலும் இன்றைய மதியவேளைக்குத் தேவையான காய்கறி, மீன்கள் உள்ள பிரம்புக் கூடையை மறு கையிலும் கொண்டு வேகமாக வீட்டை அண்மிக்கிறாள்.....

சாக்கையும், கூடையையும் வீட்டினுள் விட்டெறிந்தவேகம் அவள் தன் செல்வங்களை வாரியணைத்துக்கொள்ளத் துடிப்பது தெரிந்தது.

அந்தக் கொடியவர்கள் அப்பாவை அழித்துவிட்டபின் தன் செல்வங்களுக்கு அவள்தான் அப்பாவும், அம்மாவும்.

அணைத்துச்சென்று, கொண்டுவந்த திராட்சையைக் கொடுத்து தன்னருகில் இருத்திவிட்டு இயந்திரகதியில் உணவுசமைக்கத் தொடங்கினாள். ஏழு வயதுச் செல்வமான மாலதி வெங்காயத்தின் தோலை அகற்றுவதில் முழுப்பலத்தையும் காட்டினாள்...... ஐந்து வயதுச் செல்வமான கண்ணன் பயிற்றங்காயைப் பிளப்பதற்கு பிரயத்தனம் செய்துகொண்டிருந்தான்.

வேலையின் இடையில் மதிய உணவிற்காக வரும் கணவனுக்காக இப்படித்தானே அன்றும் இயந்திரகதியில் அவள் சமைத்துக்கொண்டிருந்தாள். களைத்து வந்த கணவன் சாப்பாட்டுக் கோப்பையைத் தொடுவதற்குள்ளாக, சொல்லிவைத்தாற்போல் "திமு திமு" என அடுக்களைக்குள் நுழைந்தார்களே அந்தக் கொடியவர்கள்.

தந்தையின் மடியிலிருந்த செல்வங்களை அடுக்களை மூலைக்குள் தூக்கிவீசிய அந்தக் கொடியகரங்கள், தன் குங்குமத்தைப் பறிக்கவந்திருப்பது புரிந்தபோது...... மண்டை விறைத்தது, அந்த தேசபக்தனின் மனைவியின் எண்ணக்கோலத்துள் மின்னல்வெட்டி, இடிவிழுந்தது..... சூறாவளி வீசியது. ...

கொடியவர்களின் கால்களை கையால் பற்றி கண்ணீரால் கழுவினாள். அந்தச் சின்னஞ்சிறு வெள்ளைப் பூக்களின் ஒளிவீசும் கண்களில் ஒளிமங்கிப்போவதைக் காட்டினாள். அந்தக் குருடர்களிடம்.... அந்தப் பிஞ்சு இதயங்களின் தவிப்பை அவர்களால் பார்க்கவே முடியவில்லை. அவர்கள் குருடர்கள்.

செல்வங்களே...! உங்கள் தந்தை ஒரு தேசபக்தன்..... செல்லை உடைக்கும் அந்த மலையின் உறுதியை உடையவர்களின் ஆதரவாளன்... சுதந்திரப்பிரியன்.... அதனால்தான்.... அந்த நாகம்போன்ற தேசத்துரோகிகளின் நச்சுக்கிரையானவர்களில்...... உங்கள் தந்தையும் ஒருவனானான்.

www.padippakam.com

நெருப்பு மழையும் ஓய்ந்துவிட்டது. சுகந்தி மீண்டும் வானொலியைத் திருகிவிட்டு வெகு நேரமாகிவிட்டது.....

"அவருக்கு அப்படியேதும்.....அப்படி நடந்திருக்காது.... கணங்கள் மணித்தியாலங்களாகி.....சுகந்தியின் வானொலியின் மூச்சும் நின்றுவிட்டது. ....."அப்படியானால் மணி பன்னிரெண்டாகிவிட்டது. அவருக்கேதும்".....குழந்தைகளின் அருகில் படுத்துக்கிடந்தவள் எழுந்து சுவரோடு சாய்ந்துகொண்டாள்.....இந்தச் சனியன்கள் எங்கெங்கே விழுந்து வெடித்ததோ?.....இதயத்தின் படபடப்பு மேலும் அதிகரித்தது. கால்கள் குளிர்ந்தன. உடல் இயங்கமறுத்தது......அவருக்கு அப்படியேதும்.....தாழ்வாரத்தைத் தடவிக்கொண்டு வீட்டினுள் புகுந்த விளக்கின் ஒளியைப் பறித்துச்சென்ற காற்று.....இப்படித்தான் சிதறிக்கிடந்த அவரின் உடலை அள்ளிச்சென்றேன் என்றதுவோ.....?கண்களை இறுக மூடிக்கொண்டாள். அப்படியெதுவுமாக இருக்கக்கூடாது.....உதடுகள் மூடியிருக்க உள்ளம் மௌனம் செய்தது. எண்ணங்கள் இருண்டுவிட்ட அவளை இருளும் விழுங்கிவிட்டது.

ஒளி.....சைக்கிளிலல்லவா வரவேண்டும். வருமா......? படலை திறக்கும்போது கிறீச்சிடும் சத்தம் கேட்டது, அவர்தான் வந்தார்...... அப்பாடா! அவளின் நிம்மதிப் பெருமூச்சு இருளோடு மோதியது....கணவனின் கையிலிருந்த டோர்ச்லைற் ஒளிவெள்ளத்தை அவள் மீது இறைத்தது. இந்த நிம்மதிப் பெருமூச்சு நாளை அவளுடன் இருக்காது. இன்று மட்டுமே என்பதை அவள் அறிந்திருக்கவில்லை.

"சென்றியில் நின்ற பாபுவின் மணிக்கட்டுக்கை 'செல்' லினால் துண்டிக்கப்பட்டுவிட்டது.....இரத்தக்கறை படிந்த வெள்ளை பெனியனைக் கழற்றிக் காட்டி அவனை டொக்டரிடம் ஏற்றிச்சென்றேன்." என்று அவன் கூறியபோது.....

அடிவயிற்றில் தீ பரவியதுபோன்ற ஒரு வேதனை உணர்வு..... அவள் வெளிக்காட்டவில்லை.

சனங்கள் கொஞ்சப்பேருக்கும் காயம்...அங்கங்கள் சிதைந்து அலங்கோலமாகக் கிடக்கின்றன......

ஐம்பத்தியெட்டாம் ஆண்டு 10 வயதில் இப்படியொரு கோரக் காட்சியை றெயில் நிலையத்தில் கண்டவன்.....

கொழும்பிலிருந்து விரைந்துவந்த றெயில் பெட்டிகள் குப்பை கொட்டுவதைப்போல கொட்டினவே......தொடர்ந்து அந்த உருவங்கள்.

முகங்கள் காய்ந்து செத்துக்கிடந்தன.....கசங்கிய பூக்களும், மிதிக்கப்பட்ட தளிர்களும், பூவினை இழந்த நார்களும், கனியினை உதிர்ந்த வெறும் மரக்கொப்புகளும்போல பலாத்காரத்திற்குள்ளான பெண்களும், கணவனை இழந்த பெண்களும், மகவுகளை இழந்த அன்னையருமாய் அழுக்கான.....கிழிந்த....இரத்தக்கறைபடிந்த.....உடைகளுடன் காலை இழந்து, கையை இழந்து, அங்கவீனர்களாய்.....

அந்தப் பத்துவயதுப் பையனின் பிஞ்சு நெஞ்சில்....தமிழர்கள் நாமென்ன பூகம்பத்தின் வாயினுள் அகப்பட்ட பூவோ?....?

இன்று பாபுவின் கைகளைப் பார்த்த அவனின் எண்ணத்தில் கவலையோ, கலவரமோ எழவில்லை.....

படுத்திருந்தவாறே மனைவிக்குக் கதை சொல்லிக்கொண்டிருந்தவன் "கௌரி பாபுவை உனக்குத் தெரியும்தானே?...."

கை துண்டிக்கப்பட்டுக் குருதிகொட்டிய நிலையிலும்கூட அவனின் அந்தச் செஞ்சூரியனின் உதித்துநின்ற முகம் படிப்பகம் ..பார்க்கின்றபோது மலையைப்போன்ற

www.padippakam.com

அதுதானே இன்று அவளின் அன்புச் செல்வங்களுக்குச் சோறு போடுகிறது. அதை அடகுவைத்துத்தானே அவளின் வெங்காய வியாபாரம் ஆரம்பமானது.

** * **

இருளவனின் கரங்கள் இங்குவரை நீளும் முன் செல்வங்களைக் குளிக்க வார்த்து, உலர்த்திய உடையணிவித்து, தலை சீவிப் பவுடர் போட்டுவிட்டு வீட்டைப் பெருக்கி விளக்கேற்றியவளுக்கு இன்றுமுழுவதும் மனசுக்குள் கனத்துக்கொண்டிருந்த சுமையை இறக்கிக்கொள்ள இப்போதுதான் நேரம்வந்தது.

சுவரில் மாட்டியிருந்த கணவனின் படத்தின் முன்னாற் சென்று விளக்கை உயர்த்திப்பிடித்தவாறு பார்த்துக்கொண்டே நின்றாள். பல நிமிடங்கள் மௌனமாகவே வேதனையைப் பகிர்ந்துகொண்டு திரும்பியபோது திணறிய பெருமூச்சு.. .....

"இந்நேரம்.....தந்தை வேலைத்தளத்திலிருந்து வீடுதிரும்புவார். வந்ததும் வராததுமாக செல்வங்கள் ஓடிச்சென்று முன்னும் பின்னும் சைக்கிளில் தொற்றிக்கொள்ளும்.....தந்தையும் ஒரு குழந்தையாய்.....முற்றத்தில் வட்டமடிப்பார்.....அவர்களின் மகிழ்ச்சி அம்மாவையும் களிப்பில் ஆழ்த்தும், குடும்பமே மகிழும்....."

அம்மாவின் அன்புக்கரங்கள் ஊட்டிய உணவை நிறையவே உண்ட செல்வங்கள் தூங்கிக்கொண்டிருந்தன, போர்வைக்குள் ஓர் அணில் பாப்பாவைப் போல.....

இந்தச் செல்வங்கள் அறியுமா? அப்பாவை அழித்த அந்தக் கொடியவரை.....அம்மாவின் இதயத்தைச் சீவிக்கொண்டிருக்கும் வேதனையை..... தூங்கிக்கொண்டிருந்த செல்வங்களை அணைத்து முத்தமிட்டாள். இரவு ஒன்பது மணியாகியும் பசியெடுக்கவுமில்லை, தூக்கம் வரவுமில்லை.....சிந்தனையில் மூழ்கியவளாய் அப்படியே மரத்தைப்போல.....செல்வங்களின் அருகில் உட்கார்ந்தாள்.

அந்தக் கொடியவர்கள் வருவதற்கு முதல்நாள் இரவும் இப்படித்தான் அவள் பிள்ளைகளின் பக்கத்தில் இருந்தாள்.....

செக்கல் பொழுதில்.....மேத்திரியாரைச் சந்தித்து நாளைய தொழில் விடயமாகப் பேசிவரச் சென்றவன், சுதந்திரன் வானொலியில் தமிழோசைச் செய்தி முடிந்தும் வரவில்லை.....சற்றுநேரத்தில் வடக்குவானில் இடி இடித்ததுபோல ஒரு சத்தம்.....

மறுகணம் கூரைக்கு மேலால் தெற்கு நோக்கி.....

உயிங்........ ங்....ங்.....ங்....

என்றொரு சத்தம் காற்றைக் கிழித்துச்சென்றது..... சில கணங்கள் கழிந்திருக்கும்.....

கூரை அதிர்ந்தது.....மற்றொரு இடிபோன்ற சத்தம். தூக்கத்திலிருந்து வீறிட்டு எழுந்த குழந்தைகள் தாயை இறுக அணைத்துக்கொண்டன, அச்சத்தம் இதயத்தை உசுப்பிவிட்டிருக்கவேண்டும். அவளின் இதயம் அடித்துக்கொள்ளும் சத்தம் அவளுக்கே கேட்டது. அது முன்பிலும் பலமடங்கு பலமாகவும், விரைவாகவும் அடிக்கத்தொடங்கியது.

இப்படியொரு நூறு நெருப்புருண்டைகள் கூரையின் மேலால் காற்றைக் கிழித்துச்சென்று வெடித்திருக்கும்.

இந்த நெருப்புருண்டைகளின் நடுவே தொழில் விடயமாகக் கதைக்கச் சென்றவன் என்ன ஆனான்.....?

படிப்பகம்

www.padippakam.com



# செஞ்சூரியனின் தோழன்

எண்ண அம்புகள் மோதி ஓய்ந்தன. அவள் மீது சமூகத்தின் பார்வை அம்புகளும் அவளின் தனித்துவமான, யதார்த்தமான பிரச்சனைகளும்தான் இவ்வாறு மோதிக்கொண்டன. "பொட்டையும் பூவையும் தொட்டுக்கொள்ள அவளுக்கு அனுமதியில்லை, வெள்ளை ஆடைக்குள் தஞ்சம்புகுந்துகொண்டவள்....வெளியில் சென்று வியாபாரம் செய்வதா? கண்டவர்களுடன் பழகுவதா?.....வேறு வழியில்லை.... என் செல்வங்களை எப்படி நான் ஆளாக்குவது? இது ஒன்றுதானே என்னாலே முடியும்!"

தனக்குள்ளே பெரும் போராட்டத்தின் பின்தான், அவள் இந்த முடிவிற்கு வந்தாள். அன்று.....அவனை அவள் இழந்துவிட்டபோது கூடவே அவளிடமிருந்து அந்தப் புன்னகை.....மகிழ்ச்சி.....ஆர்வம்.....எல்லாமும் இழந்து போயின.

மீண்டும் மூன்று மாதங்களின் பின் இன்றுதான் அவை அனைத்தும் ஒன்றாய்கூட ஒரு அருவியின் பாய்ச்சலாக அவளிருந்தாள்.

"சுகந்தி!...சுகந்தி! இங்கே வாவனை.

இந்த வெங்காயச் சாக்கை ஒருக்கால் தலைக்கு உயர்த்தி விட்டுப் போ அம்மா!"

சுகந்தி பக்கத்து வீட்டுப் பெண். கௌரியின் கணவன் இறந்த பின் எதிலும் அவளுக்கு ஒத்தாசையாக இருப்பவள். பத்தாவது ஆண்டு படிக்கவேண்டிய சிட்டு, இவ்வாண்டு தொடக்கத்தில் பள்ளிக்கு முழுக்குப் போட்டுவிட்டு சிறைப்பறவையானாள்.

"என் செல்வங்கள் பள்ளிக்கூடம் விட்டதும் பறந்துவரும். நான் இருக்கமாட்டன். நீதான் பார்த்துக்கொள்ளம்மா.....! தெருத்திண்ணையில் விளையாட்டுக்குப் போய்விடுங்கள்.....சைக்கிள்.....வான்.....கவனமம்மா!"

சுகந்தியிடம் கேட்டுக்கொண்டவள் நிம்மதியோடு விரைவாக நடக்கத்தொடங்கினாள்.

பூவினைச் சூடிக்கொள்ளமுடியாத கூந்தல், வேதனையால் நீலக் கொடிப்பூ வரைந்த அவளின் வெள்ளைப் புடவைக்குள் முகத்தைப் புதைத்துக்கொள்ள......கழுத்தடைக்க அவள் சுமந்து செல்வது வெறும் வெங்காயச் சாக்கல்ல, தன் செல்வங்களை ஆளாக்கும் செல்வத்தை.அவர்களின் எதிர்காலத்தை.

அவளும் அவளின் செல்வங்களும் அவனின் புகைப்படத்தை நேசிக்கத்தொடங்கி இன்றோடு மூன்று மாதங்களும், ஐந்து நாட்களும் முடிந்துவிடுகின்றன.

தன் செல்வங்களுக்குச் சொத்தென்று அவன் அந்த அழகான ஓலைக்குடிசையையும், தன் அன்பையும், பண்பையும் குவித்துவிட்டுச் சென்றானே தவிர.....அவர்கள் இருக்கும் குடிசைகூட இரவல் காணியில்தான் இருக்கிறது.

அவள் முகத்தை அலங்கரித்துக்கொண்டிருந்த அந்தக் காதணி.....தினம் அவன் கல்லையும், மண்ணையும் சுமந்த தன் வியர்வையைப் பொன்னாக்கி **அன்பினால்** வடிவமைத்து அவளின் காதுகளில் அணிவித்ததுதானே அந்த அன்புச்சொத்து..


படிப்பகம்


www.padippakam.com

## உஷ்......
## சத்தம் போடாதீர்கள்
## வீரத்தின் விதைகள்
## இங்கு விதைக்கப்பட்டுள்ள

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
|---|---|---|---|---|
| லெப் சுரேஸ் | சத்தியசுரேஸ் | திருநெல்வேலி | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| வீமன் | பிலிப் றோஜ் நிரஞ்சன் | சாவற்காடு | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| 2வது லெப் சிவம் | ஆபிரகாம் முருகையா | கிளிமோட்டை | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| பீற்றர் | சகாயராசா | கருங்கண்டல் | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| சிவா | செல்வரெட்னம் | பாலப்பெருமாள்கட்டு | கொந்தக்காரன்குளம் | 21.06.1989 |
| இராமகிருஷ்ணன் | ஞானம் | கரம்பைக்குளம் | கொந்தக்காரன்குளம் | 21.06.1989 |
| பவான் | | பெரியமடு | அச்செழு கொலனி | 20.12.1987 |
| கப்டன் கைலன் | கேதீஸ் | இத்திக்கண்டல் | அளம்பில் | 22.03.1989 |
| ஜஸ்ரின் | பற்குணம் | 2ம் பாம்செட்டிகுளம் | அளம்பில் | 03.03.1989 |
| மேஜர் காசி | சிவனேசன் | சுன்னாகம் | கனகராயன்குளம் | 02.11.1988 |

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 01.07.1989வரை மன்னார் பிராந்தியத்தில் 143 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

# இவர்களுக்கு எமது வீரவணக்கங்கள்




படிப்பகம்

www.padippakam.com

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
|---|---|---|---|---|
| லெப் பீற்றர் | யோகராசா | பரப்புக்கடந்தான் | நம்பைக்குளம் | 10.10.1988 |
| 2வது லெப் இராசதுரை (எம்.ஜி.ஆர்) | இராஜதுரை | பரப்புக்கடந்தான் | நம்பைக்குளம் | 10.10.1988 |
| 2வது லெப் ஜெயந்தன் | பிரான்சிஸ் | நாவற்குளம் | நம்பைக்குளம் | 10.10.1988 |
| 2வது லெப் ராஜேந்தர் | சிறிதரன் | பேசாலை | நம்பைக்குளம் | 10.10.1988 |
| 2வது லெப் நியாஸ் | மகேந்திரன் | அளவக்கை | நம்பைக்குளம் | 10.10.1988 |
| 2வது லெப் கருணா | யோகரெட்ணம் | கன்னாட்டி | நம்பைக்குளம் | 10.10.1988 |
| லெப் ஆனந்த் | ரகு | குருமன்காடு | நம்பைக்குளம் | 10.10.1988 |
| கப்டன் சைமன் | ராதா | அடம்பன்தாழ்வு | நம்பைக்குளம் | 10.10.1988 |
| ரவிக்காந்த் | ஞானப்பிரகாசம் | பாப்பாமோட்டை | நம்பைக்குளம் | 10.10.1988 |
| அன்னக்கிளி | செல்ஸ்ரின் | செல்லையாபுரம் | பண்டிவிரிச்சான் | 16.12.1988 |
| குணம் | ரவீந்திரராஜா | செட்டிகுளம் | பண்டிவிரிச்சான் | 01.02.1989 |
| லெப் ரூபன் | கந்தசாமி | மண்டைதீவு | தம்பனைக்குளம் | 02.02.1989 |
| சேகர் | சின்னத்தம்பி | பாலம்பிட்டி | தம்பனைக்குளம் | 02.02.1989 |
| 2வது லெப் செலஸ்ரின் | விமலன் | பட்டித்தோட்டம் | பேசாலை | 10.02.1989 |
| லெப் சௌகான் | மரியதாஸ் குலாஸ் | வங்காலை | பேசாலை | 10.02.1989 |
| கப்டன் காண்டீபன் | கேதீஸ்வரன் | நல்லூர் வீதி | பேசாலை | 10.02.1989 |
| பெனா | தியாகராஜா | பாலியாறு | வவுனியா | 01.05.1989 |
| கப்டன் அமலன் | அமலதாஸ் | காத்தான்குளம் | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| லெப் மாக்ஸ் | சசிக்குமார் | தச்சனாமருதமடு | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| லெப் நரயுடு | ஜெட்சீலன் | பள்ளக்கமம் | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| கப்டன் புதுமை | குமார் | புரவாட்டி - | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| கப்டன் குலம் | ரவி | செல்லையாபுரம் | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| கப்டன் சபேசன் | இராசரத்தினம் | பரியாரிகண்டல் | முள்ளிக்குளம் | 20.05.1989 |
| லெப் கர்ணன் | சிவகுமார் | நல்லூர், பூநகரி | முள்ளிக்குளம் | 20.05.1989 |

விடுதலைக்கு உரமாய்!

தமிழீழத்து வேலிகளிற்கு உரமாகவுதிர்ந்த இரத்த மழையை இப்போதுள்ள பச்சை மரவேர்கள் பயன்படுத்தினால்தான், வெறிச்சோடிய நிலமெங்கும் வெற்றியின் நிழல்களாகும்.


படிப்பகம்

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
|---|---|---|---|---|
| 2வது லெப் சுகன் | சத்தியவேல் | வேப்பங்குளம் | மூளாய் | 03.11.1987 |
| லெப் குட்டி | ஜெயவர்த்தனா | அரியாலை | மூளாய் | 03.11.1987 |
| நோயல் | | சின்னப்பண்டி-விரிச்சான் | யாழ் கோட்டை | 18.10.1987 |
| முகமது | மடுத்தீன் | உயிர்த்தராசன்-குளம் | மூளாய் | |
| ராஜ் | மோகன் | ஊத்திக்குழி | கொக்குவில் | |
| நியூமன் | பாஸ்கர் | பூநகரி | யாழ், கோட்டை | 13.10.1987 |
| லெப் தாம்பிரின் | ஜெயக்குமார் | கிராஞ்சி | வெள்ளாங்குளம் | 16.03.1988 |
| லெப் முரளி | அன்புமணி | உயிலங்குளம் | வெள்ளாங்குளம் | 16.03.1988 |
| ரவி | | அரியாலை | வேரவில் | 10.04.1988 |
| சின்னரவி | | வேரவில் | வேரவில் | 10.04.1988 |
| கப்டன் நிக்ஸன் | பத்திநாதன் | நறுவிலிக்குளம் | முக்கொம்பன் | 17.04.1988 |
| 2வது லெப் சங்கர் | தயா | நல்லூர், பூநகரி | முக்கொம்பன் | 17.04.1988 |
| கப்டன் நரேன் | ஜனார்த்தனன் | யாழ்ப்பாணம் | வெள்ளாங்குளம் | 28.04.1988 |
| லெப் ஜீவன் | | திருகோணமலை | பரப்புக்கடந்தான் | 29.04.1988 |
| கர்ணன் | ஆனந்தன் | ஆலங்குளம் பூநகரி | சிறாட்டிகுளம் | 02.05.1988 |
| 2வது லெப் சைமன் | அன்ரன் | தாமரைக்குளம் | நாச்சிக்குடா | |
| காண்டீபன் | | | யாழ்ப்பாணம் | 04.07.1988 |
| கப்டன் காசீம் | ஜெகநாதன் | வாழ்க்கைப்பட்டான்கண்டல் | சுழிபுரம் | 16.07.1988 |
| கப்டன் எட்வின் | சந்திரன் | பள்ளிமுனை | ஆட்காட்டிவெளி | 29.07.1988 |
| யோகசிவம் | கணேசமூர்த்தி | நீலியாமோட்டை | செட்டிகுளம் | 07.09.1988 |
| 2வது லெப் குணம் | ரவி | விடத்தல்தீவு | கோண்டாவில் | |
| கப்டன் சைமன் | ராதா | அடம்பன்தாழ்வு | இரும்பைக்குளம் | 10.10.1988 |

## என்றும் நீ எம்மோடு.!..

களத்தில்
விழுப்புண்ணேந்தி
நீ, வீழ்கையில்
நாவில் நீரூற
ஆக்கிரமிப்பாளன்
உன்னை நெருங்கையில்
விருப்புடனே
நீ,
நஞ்சைச் சுவைத்தாய்
நங்கையரா யினும்
வெஞ்சினம் பொங்கும்
வேங்கையரே என்று
காற்றிலே கலந்து
எம்மிடம் வந்தாயல்லவா!


படிப்பகம்
www.padippakam.com

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
|---|---|---|---|---|
| குமா | | | யாழ் கோட்டை | |
| விஜி | அம்பிகா | அடம்பன்தாழ்வு | செட்டிகுளம் | |
| மேஜர் அசோக் | டேவிட் | வட்டுப்பித்தான்மடு | பூநகரி | 27.07.1987 |
| லெப் சேகர் | சிறீதரன் | குமாணாயங்குளம் | பூநகரி | 27.07.1987 |
| லெப் அலிபா | ஜோசப் | நவிலிக்குளம் | பூநகரி | 27.07.1987 |
| லெப் துரைமணி | எட்வேட் | இசைமாலைத்தாழ்வு | பூநகரி | 27.07.1987 |
| 2வது லெப் ரகு | பாஸ்க்கர் | அடம்பன் | பூநகரி | 27.07.1987 |
| செந்தூரன் | தங்கேஸ் | உயிலங்குளம் | பூநகரி | 27.07.1987 |
| சில்மன் | செல்வக்குமார் | பாலைக்குழி | நானாட்டான் | 26.08.1987 |
| அர்ச்சுனா | சகாயன் | கள்ளியகட்டைக்காடு | நானாட்டான் | 26.08.1987 |
| ரஞ்சன் | ரஞ்சன் | பள்ளங்கோட்டை | நானாட்டான் | 26.08.1987 |
| டென்ஸில் | மிக்கேல் | தட்சணாமருதமடு | பெரியபண்டிவிரிச்சான் | 02.09.1987 |
| கொலின்ஸ் | வாக் | கன்னாட்டி | நம்பனை | 07.09.1987 |
| இரத்தினம் | | பூநகரி | 3ம் பிட்டி | 13.09.1987 |
| 2வது லெப் மாலதி | சகாயசீலி | ஆண்டான்குளம் | கோப்பாய் | 10.10.1987 |
| 2வது லெப் ஜெயந்தி | காமாட்சியம்மாள் | பரப்புக்கடந்தான் | [illegible] | 04.07.1988 |
| சசிலா | ரஜனி | மன்னார் | அச்செழு. கொலனி | 20.12.1987 |
| ஜெனா | புஸ்பலதா | கன்னாட்டி | கோப்பாய் | 18.10.1987 |
| விஜி | கோமதி | கோண்டாவில் | கோப்பாய் | 18.10.1987 |
| றாபி | மாரியம்மா | இலுப்பைக்கடவை | கொக்குவில் | 03.11.1987 |

# உறுதி

எங்கள்
களங்களில் அருகளில்
குருதி தேங்கலாம்...!
மீண்டும் ஒருநாள்.....
அந்தக் குருதிச்சேற்றில்
ஒரு கரு உதிக்கும்!
உயிர்களின் பரிணாமம்
-நிகழும்
புதிய மனிதன் எழுவான்!
நிச்சயம் அவன்
சுதந்திரமானவன்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

| இயக்கப் பெயர் | | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
|---|---|---|---|---|---|
| | விஸ்ணு | விஜயா | நெடுங்கண்டல் | இலுப்பைக்கடவை | 09.02.1987 |
| | தங்கேஸ் | ஜெயக்குமார் | நவிலிக்குளம் | இலுப்பைக்கடவை | 09.02.1987 |
| லெப் | சித்தார்த்தன் | வசீகரன் | வவுனியா | கைதடி | 14.02.1987 |
| | கில்மன் | மெற்றா கீர்த்திராஜ் | கள்ளியகட்டைக்காடு | யாழ் கோட்டை | 23.03.1987 |
| | கிட்லர் | | | கட்டுவன் | 30.03.1987 |
| 2வது லெப் | ஜஸ்டின் | சங்கர் | தலை மன்னார் | மயிலியதனை | 04.04.1987 |
| 2வது லெப் | மார்சல் | | வெள்ளாங்குளம் | மயிலியதனை | 04.04.1987 |
| | தாஸ் | தசைதால | பெரியநீலாசேனை | காங்கேசன்துறை | 22.04.1987 |
| கப்டன் | பவான்(ஐயா) | | சுதுமலை | காங்கேசன்துறை | 22.04.1987 |
| | ஸ்கொட் | அன்ரன் | கள்ளியகட்டைக்காடு | யாழ்ப்பாணம் | 23.04.1987 |
| | வாசன் | ராஜ் | சின்னப்பண்டிவிரிச்சான் | யாழ் கோட்டை | 30.05.1987 |
| 2வது லெப் | அசோக் | நாகராசா | சின்னப்பண்டிவிரிச்சான் | யாழ்ப்பாணம் | 03.06.1987 |
| லெப் | மார்க்கண்டு | கனகரத்தினம் | முழங்காவில் | அச்சுவேலி | 06.06.1987 |
| 2வது லெப் | வில்லியம் | விஜி | வவுனியா | கட்டுவன் | 08.06.1987 |
| | குமரிநாடான் | ஸ்ரீரங்கன் - விஜயபாலன் | முழங்காவில் | குரும்பசிட்டி | 15.06.1987 |
| | விண்டன் | நடராசா | இரணை இலுப்பைக்குளம் | வடமராட்சி | 13.07.1987 |
| | பதுமன் | குயின்டஸ் | பெரியபண்டிவிரிச்சான் | தெல்லிப்பழை | 17.07.1987 |

## எங்கள் தோழன்

மெல்ல இருள் விலகு
அந்த அமைதியான
புலரும் பொழுதில்.....
படுக்கையை விட்டெழும்
இளைய சூரியனின்
சிவப்புக் கிரணங்களாக
அவன் எம்மைத் தழுவ
இனிய மொழியில்
இதமாய்ப் பேசி
விடியலை அழைக்கும்
வனப்பறவைகளின்
வனப்பில் அவனிருப்பான்
புதிய சீருடையணிந்து
புதிய துப்பாக்கியும் கொ
புதிய அனுபவம் பெற
எங்கள் பாசறைக்கு வரு
புதிய தோழனின் செயலி
அவனிருப்பான்!

• • • •



படிப்பகம்

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
|---|---|---|---|---|
| விஸ்வநாத் | ராஜேந்திரன் | அடம்பன்தாழ்வு | அடம்பன் | 03.08.1986 |
| சுதா | சுதா | சகாயவதி | அடம்பன் | 03.08.1986 |
| 2வது லெப் காளி | ஜெயராட் யோன் | கங்காணித்தீவு | மன்னார்கோட்டை | 04.09.1986 |
| லெஸ்டர் | ஜெபநேசன் | நெடுங்கண்டல் | அடம்பன் | 21.09.1986 |
| லெப் கேணல் விக்ரர் (மன்னாரப் பிராந்திய தளபதியும், மத்திய குழு உறுப்பினரும்) | மருசலீன் பியூஸ்லஸ் | பனங்கட்டிக்கொட்டு | அடம்பன் | 12.10.1986 |
| 2வது லெப் றோம் | செல்வநாதன் | தாமரைக்குளம் | அடம்பன் | 12.10.1986 |
| நாயுடு | பத்திநாதன் | சின்னப்பண்டிவிரிச்சான் | சின்னப்பண்டிவிரிச்சான் | 15.10.1986 |
| விஜி | மரியரெட்ணம் | முருங்கன்பிட்டி | மாந்தை | 22.10.1986 |
| 2வது லெப் சிறி | ஜோன்சில்வா | கொவ்வங்குளம் | பெரியமடு | 13.12.1986 |
| லெப் கிறிஸ்ரி | பேச்சிமுத்து | தமிழ்நாடு | கிளிநொச்சி | 29.12.1986 |
| நிலான் | ரவி | பனங்கட்டிக்கொட்டு | மட்டக்களப்பு | |
| வேதமணி | சிவலிங்கம் | ஆட்டாள்குளம் | கடலில் | 03.10.1987 |
| பிறின்ஸிலி | பாஸ்க்கர் | பனங்கட்டிக்கொட்டு | ஊர்காவற்றுறை | 31.10.1986 |
| லிண்டன் | தூசைப்பிள்ளை | கன்னாட்டி | யாழ்ப்பாணம் | 11.01.1987 |
| கப்டன் நோயல் | உதயன் | பறப்பாங்கண்டல் | பரப்புக்கடந்தான் | 07.02.1987 |
| லெப் கரன் (மாமா) | | தூறாவத்தை | பரப்புக்கடந்தான் | 07.02.1987 |
| விசு | சித்திரவேல் | பூநகரி | பூநகரி | 10.02.1987 |
| ஜீவன் | குமார் | நெடுங்கண்டல் | பண்டிவிரிச்சான் | 07.02.1987 |

எங்கு வேண்டுமானாலும்,
எப்பொழுது வேண்டுமானாலும்,
மரணம் நம்மைத் திடீரெனத்
தழுவட்டும். - நாம் அதை
மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.
ஆனால், நமது போர்க்குரலை
இன்னொருவர் செவிமடுப்பார் என்றால்,
நமது ஆயுதங்களை எடுத்துக்கொள்ள
இன்னொருவர் கைநீட்டுவார் என்றால்,
நமது இறுதி ஊர்வலத்தின்
சோககீதத்தை
இயந்திரத்துப்பாக்கி ஓசையாலும்,
புதிய யுத்தம், புதிய வெற்றியின்
ஓசையாலும் இசையமைத்துப் பாட
இன்னொருவர் முன்வருவார் என்றால்.

-சேகுவரா-



www.padippakam.com
படிப்பகம்

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
| --- | --- | --- | --- | --- |
| டேர்ஸ்மன் | இருதயநாதன் பீரிஸ் | அரிப்புத்துறை | நாயாற்றுவெளி | 17.01.198 |
| லெப் உமாகாந்த் | நீக்கிலாஸ் | காத்தான்குளம் | பரப்புக்கடந்தான் | 28.01.1986 |
| 2வது லெப் தேவா | சிவகுமார் | பாலம்பிட்டி | மதவாச்சிவீதி | 13.02.1986 |
| லெப் சிறீநாத் | தயாநிதி | பறப்பாங்கண்டல் | மன்னார் | 22.02.1986 |
| வினோத் | மைக்கல் குரூஸ் (குணம்) | வங்காலை | மன்னார் | 22.02.1986 |
| மோகன் | | தலைமன்னார் | கொக்காவில் | 03.04.1986 |
| யோஜ் | லெனாட் கிறிஸ்ரிமொராஸ் | வங்காலை | கொக்காவில் | 03.04.1986 |
| ரகு | வசீகரன் | உடப்பு | இயக்கச்சி | 17.05.1986 |
| ரஞ்சித் | ஜெயராஜ் சோசை | வங்காலை | இயக்கச்சி | 17.05.1986 |
| லெப் அர்ச்சுனா | தமிழரசுவரன் | அத்தியடி | மாந்தை | 12.06.1986 |
| தேவராஜா | இசைன்ட் சில்வஸ்டர்லெம்பட் | பெரியபண்டிவிரிச்சான் | கடலில் | 19.06.1986 |
| புதியவன் | கிங்ஸ்லி ராஜசூரியர் | சின்னப்பண்டிவிரிச்சான் | யாழ்ப்பாணம் | 24.07.1986 |
| விசு | லிங்கநாதன் | மாளிகைத்திடல் | அடம்பன் | 03.08.1986 |
| சசி | ¨ நமன் ரோ¨யாலெஸ்லி | அடம்பன் | அடம்பன் | 03.08.1986 |
| சுனில் | யோசப் குருஸ் | சிறுக்குளம் | அடம்பன் | 03.08.1986 |
| தீபி | அனக்கிளிறஸ் ரீனா | வங்காலை | அடம்பன் | 03.08.1986 |
| சங்கர் | செல்வம் | 5ம் கட்டை | அடம்பன் | 03.08.1986 |

புதிய முறைகளில்
பல வடிவங்களில்
திணிக்கப்படுவதை
நாம் உணர்கின்றோம்
விடிவிற்காய்
உங்களை நீங்கள்
அர்ப்பணித்துவிட்டீர்
உங்கள் கிழப்புக்க
வீணல்ல, ஏனெனில்
அவை
அர்த்தம் நிறைந்தவை
நீங்கள் விட்ட பணிகளை
நாம் தொடர்கின்றோம்



www.padippakam.com
படிப்பகம்

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை மன்னார் பிராந்தியத்தில் வீரமரணமடைந்த புலிகள்

| இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | சொந்த இடம் | வீரமரணமடைந்த இடம் | வீரமரணமடைந்த திகதி |
| --- | --- | --- | --- | --- |
| லெப் நிதி | சுதாகர் | பனங்கட்டிக்கொட்டு | பரப்புக்கடந்தான் | 18.12.1984 |
| ஜெராட் | இராசலிங்கம் | மன்னார் | பள்ளமடு | 01.02.1985 |
| லெப் பீரிஸ் | ஞானப்பிரகாசம் | பரப்புக்கடந்தான் | பள்ளமடு | 01.02.1985 |
| விஜி | றேமன் றெகுலாஸ் | தேவுடையான் | நாயாற்றுவெளி | 23.02.1985 |
| லெப் குமா | குமாரசாமி | பூநகரி | கருக்காத்தீவு | |
| சபேசன் | ராஜன் | கொக்குவில் | மன்னார் | 10.04.1985 |
| செல்வன் | பெனடிற் | ஆட்காட்டிவெளி | கடலில் | 17.04.1985 |
| லிங்கராஜா | எலியாஸ் | குமாரியங்குளம் | கடலில் | 17.04.1985 |
| ரமணன் | சிவபாலன் | தாமரைக்குளம் | கடலில் | 17.04.1985 |
| லெப் பிரசன்னா | | உருத்திரபுரம் | முள்ளிக்குளம் | 14.05.1985 |
| லெப் சாம் | | ஏழாலை | பள்ளமடு | 07.10.1985 |
| பிறின்ஸிலி | சகாயநாதன் | அரிப்புத்துறை | உயிலங்குளம் | 12.10.1985 |
| ஜேசுதாசன் | ராமு | அரிப்புத்துறை | உயிலங்குளம் | 12.10.1985 |
| லெப் றொனி | சௌந்தரநாயகம் | பறப்பாங்கண்டல் | பிள்ளையார்பிட்டி | 14.11.1985 |
| பவா | ஜெபநேசன் | பெரியபண்டிவிரிச்சான் | [illegible] | 14.11.1985 |

நீங்கள்

மரணிக்கவில்லை!

நண்பர்களே!
நீங்கள்
நடந்த பாதை
நீண்டது, கடினமானத
அடிமைத்தனம் என்பது
ஓர் இருள் சூழ்ந்த
சிறைச்சாலை
எம்மீது
அடிமைத்தனம்
திணிக்கப்படுகிறது


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




மாண்டு போனான்
மறவர்களின் மன்னன் என்று
மதில்கள் பறைசாற்றுகின்றன
உன் வீரமரணத்தை விபரிக்கும்
நம் தேசத்து
மதில்களுக்குத்தான்
எத்தனை . . . . . எத்தனை
மகிழ்ச்சி

மக்கு மதில்களே நாங்கள்
உங்களைப் பார்த்து
கண்களைத் துடைக்கவில்லை
மில்லரைப் பார்த்து
விம்மி அழுகின்றோம்

நெல்லியடி முகாமை
நிர்முலமாக்க
நீ சென்ற நிலையை
நேரில் நான்
பார்க்கவில்லைத்தான்
ஆனால்
பார்த்தவர்களின் தகவல்களை
மறக்கமுடியவில்லை

மரணத்துடன்
தோழமை பூண்டது
மறவர் கூட்டம்
ஆனால் நீ
மரணத்தையே
மணம் புரிந்து
அதன்
மடியில் துயின்றவன்

சாவை முறியடிக்க
சிலர்
பார்க்கும் நேரம்
நீயோ
சாவை முதுகிலேற்றி
சரித்திரம் படைத்துவிட்டாய்

ஒப்பரேசன் லிபரேசன் என்று
ஒப்பாரியடித்து
மரணத்தைக் கண்டு சிலர்
கார் பிடித்துச்
சென்ற நேரம்
நீ மரணத்தையே
காரில் ஏற்றிச்சென்றவன்

நீ, நுழைந்ததும் எழுந்த
பாரிய சத்தத்தின்
பயங்கர அமைதியின் பின்
உன் குரல்
எங்காவது ஒலிக்கின்றதா?
என்று
எம் காதுகளைக் கூர்மையாக்கினோம்

நிமிடங்கள்
மணித்தியாலங்களாக மாற
கண்களை
கண்ணீர் திரையிட
வெற்றி பெற்றிருந்தும்
வெறுமை உணர்வுடன்
திரும்பினோம்

மில்லரே
உன் கல்லறை
காங்கேசன்துறை சீமெந்தால்
கட்டப்பட்டதல்ல
தேசத்தின் மீதியில்
தியாகத்தின் திரட்சியால்
உருவாக்கப்பட்டது

உன் கல்லறை
கண்ணீர் விடுவதற்கல்ல
கல்விக் கூடமாகிப்
பாடம் படிப்பதற்கு

ஐந்தும், இரண்டும்
அங்கே அறிவுறுத்தப்படுவதில்லை
தியாகமும், விடுதலையுமே
விரிவுரைகளாகின்றன

அங்கே பரீட்சைகள்
நடைபெறுவதில்லை

அநீதிக்கு
எதிரான
படையெடுப்புக்களே
நிகழ்கின்றன.

------* * *------

www.padippakam.com

விடுதலைப் புலிகளின் வீர சுதந்திரப்போர் வெற்றிகண்டால் அதன் விளைவுகள் தென்னாசியக் கண்டத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். இந்திய வல்லாதிக்கத்திற்குப் பயந்து ஒதுங்கியுள்ள தென்னாசிய நாடுகள் இந்தியாவை எதிர்த்துநின்று சுயாதீனமாகச் செயற்படும் துணிவும், நம்பிக்கையும் பெற்றுவிடக்கூடும். இந்தியாவில் காலங்காலமாக நசுக்கப்பட்டு, ஒடுக்கப்படும் பல்வேறு தேசிய இனங்கள் விழிப்புற்று எழுச்சிபெற்று தேசிய சுயநிர்ணயப்போர் தொடுக்கத் துணிந்துவிடலாம். தமிழீழ சுதந்திரப் புரட்சித் தீ பாரத கண்டத்தில் பரவி முதலாளித்துவ ஆட்சியமைப்பை ஆட்டங்காணவைக்கலாம். இறுதியில் தனது பிராந்திய வல்லரசு ஸ்தானத்திற்குப் பங்கம் ஏற்படலாம். இப்படியான அச்சங்கள் காரணமாக இந்திய அரசு எமது போராட்டத்தை நசுக்கிவிட எல்லாவிதமான நாசகார யுத்திகளையும் கையாளலாம்.

இந்திய அரசு எந்தவித தந்திரோபாயங்களைக் கையாண்டு எம்மை நசுக்கமுற்பட்டாலும், நாம் உறுதி தளராது போராடுவோம். இறுதியில் வெற்றி எமதே என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையுண்டு. சத்தியமும், தர்மமும் எமது பக்கம் இருக்கும்வரை, வரலாற்றின் ஆன்மா எம்மை வழிநடத்தும்வரை, மலைபோல் மக்கள் ஆதரவு எமக்கு இருக்கும்வரை எமது போராட்டத்தை எந்தச் சக்தியாலும் அழித்துவிடமுடியாது.

ஒடுக்கப்படும் மக்களே வரலாற்றைப் படைக்கிறார்கள். இந்த வரலாற்றைப் படைத்து உலக சரித்திரத்தின் ஓட்டத்தில் ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தும் மகத்தான கடமை எமது மக்கள் மீதும் எமது மக்களின் சுதந்திர எழுச்சியின் வடிவமான எமது இயக்கத்தின் மீதும் சுமத்தப்பட்டிருக்கின்றது.

ஈழத் தமிழினம் சிந்திய இரத்தத்திலிருந்து உலக வரலாற்றுச் சக்தி புனர்ஜென்மம் பெற்று புதிய உலகம் படைக்கும். உலகின் ஒடுக்கப்படும் மக்களுக்கும், நசுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் எமது போராட்டம் புதிய விழிப்புணர்வு கொடுக்கும். ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக அமையும்.

---*. * *---

## இந்தியப் பிரதமர் ராஜீவின் அன்பளிப்பை பூட்டானிய மன்னர் ஏற்க மறுத்துள்ளார்......

பூட்டான் நாட்டிலிருந்து இந்திய வர்த்தகர்களையும், இந்தியத் தொழிலாளர்களையும் வெளியேற்ற பூட்டானிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்களை வெளியேற்றிவிட்டு பூட்டானிய மக்களைக்கொண்டே அந்த இடங்களை நிரப்புவதுதான் பூட்டானிய அரசின் தேசியக் கொள்கைபோல் தெரிகின்றது. மேலும், இந்தியக் கலாச்சாரங்களின் தாக்கங்கள் பூட்டானிய மக்களின் பாரம்பரியக் கலாச்சாரத்தைப் பாதிக்கின்றது. இது இந்தியத் தொலைக்காட்சிகளுக்கூடாகவே நிகழ்கின்றது. எனவே இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பூட்டானிய மக்கள் பார்ப்பதை பூட்டானிய மன்னர் தடைசெய்துள்ளார்.

அத்துடன் திரு. ராஜீவ்காந்தியால் அன்பளிப்புச் செய்யப்பட்ட "தொலைக்காட்சி அன்ரனாசெற்றை" பூட்டானிய மன்னர் ஏற்காது திருப்பியனுப்பியுள்ளார். இது தொடர்பாக அரசியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "இதுவரை காலமும் பூட்டான் மீது இந்தியா செலுத்திவந்த மேலாதிக்கத்தை பூட்டானிய மன்னர் வெறுக்கின்றார் என்பதுடன் எவரது தலையீடுமின்றி தனது மக்களைச் சுயமாக வாழ வைக்கவே அவர் விரும்புகின்றார் என்று தெரிகின்றது. இந்த நிகழ்ச்சிகள் இந்தியாவைச் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளன. ஏற்கனவே நேபாளத்திற்கும், இந்தியாவிற்கும் இடையிலிருந்த சர்ச்சைகள் காரணமாக இரு நாடுகளும் முரண்பட்டபடியுள்ளன என்பது

படிப்பகம்

www.padippakam.com

உள்ளீட்டாக எழும் வர்க்கமுரண்பாடு, ஒடுக்குமுறை, ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆதிக்கம், பிராந்திய வல்லரசுகளின் தலையீடு, அத்துடன் அந்தந்த நாடுகளின் பூகோள அமைப்பு, கேந்திர முக்கியத்துவம், அரிய வளங்கள், அந்தந்தப் போராட்டங்களின் தனிச்சிறப்பான தன்மைகள், உன்னத தியாகங்கள், வீரம் செறிந்த அர்ப்பணிப்புக்கள் ஆகியவற்றைக் காரணங்களாகக் கொள்ளலாம்.

* மன்னராட்சிக்கும், பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கும் எதிராக வெடித்த பிரஞ்சுப் புரட்சி,
* உலகின் முதலாவது சோசலிச சமூக மாற்றத்தைக் கொண்டுவந்த ரஷ்யப் பாட்டாளிவர்க்கப் புரட்சி,
* ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டமாகவும், சோசலிசப் பாதை தழுவிய கிளர்ச்சியாகவும் உருவகம்கொண்ட சீன மக்களின் புரட்சி,
* பிரஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்திய அடக்குமுறைகளை உடைத்தெறிந்த வியட்நாமிய மக்களின் வீரம்செறிந்த விடுதலைப் போர்,
* அமெரிக்க ஏகாதிபத்திய சுரண்டல்முறைக்கு முண்டுகொடுத்து நின்ற பட்டிஸ்ரா சர்வாதிகாரத்தை மண்கவ்வச்செய்த கியூப மக்களின் புரட்சிகர ஆயுதப்போராட்டம்,
* தனது சொந்த பூகோள நலனுக்காக அயல்நாட்டுமக்களை அடிமைகொள்ளமுனைந்த சோவியத்யூனியனுக்கு சாட்டையடி கொடுத்த ஆப்கானிஸ்தானின் விடுதலைப் போராட்டம்.

இந்தப் புரட்சிகர யுத்தங்கள் மனிதகுல விடுதலை வரலாற்றுப் பாதையில் பெரும் திருப்புமுனைகளாக அமைந்ததோடு, உலக சமூக அமைப்பிலும் புரட்சிகரமான மாற்றத்திற்கு வழிகோலின. உலக ஏகாதிபத்தியத்திற்கும், பிராந்திய வல்லாதிக்கத்திற்கும் சவாலாக அமைந்து, சர்வதேசப் பரிணாமம் பெற்ற இப் புரட்சிகர விடுதலைப் போராட்டங்கள் உலகின் ஒடுக்கப்படும் மக்களுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டிகளாகவும் திகழ்கின்றன.

எமது போராட்டமும் இன ஒடுக்குமுறையால் எழுந்த அரசியல் தேசிய சுயநிர்ணயப் போராட்டமாக உருவகம் பெற்றிருந்தபோதும், இந்திய பிராந்திய வல்லாதிக்கத்தின் தலையீடு காரணமாக சர்வதேச பரிமாணத்தை பெற்றிருக்கிறது. பிராந்திய, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான விடுதலைப் போராட்டமாக விரிவாக்கமும், முக்கியத்துவமும் பெற்றிருக்கும் எமது விடுதலைப் போராட்டம் மூன்றாம் உலக மக்களுக்கு ஒரு உன்னத வழிகாட்டியாக அமைகிறது. பிராந்திய வல்லாதிக்கம் காரணமாகத் திணறிக்கொண்டிருக்கும் கோடானுகோடி மக்களுக்கு எமது வீரம்செறிந்த போர் ஒரு புதிய நம்பிக்கையையும், உற்சாகத்தையும் கொடுத்திருக்கிறது.

இந்திய ஏகாதிபத்தியம் எமது போராட்டத்தை நசுக்கிவிட பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறது. தென்னாசிய உலகத்தை தனது வல்லாதிக்கப் பிடிக்குள் வைத்திருக்க முனைந்த இந்தியப் பேரரசிற்கு ஒரு சிறிய விடுதலை இயக்கம் ஒரு பெரிய சவாலாக எழுந்திருப்பது அவமானத்தையும், ஆத்திரத்தையும் மூட்டியிருக்கின்றது. எமது போராட்டம் வெற்றிபெறுமாயின் தனது அரசியல் பூகோள அபிலாசைகளைப் பூர்த்திசெய்யமுடியாது என இந்திய அரசு அச்சம் கொண்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

1883ம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் எட்டு மணி நேர வேலை நாளைக் கோரி நடைபெற்ற வேலை நிறுத்தம் தொழிலாளர் வர்க்கச் சரித்திரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இதுவே பின்பு முழு உலகிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தினதும் வர்க்கப் போராட்டமானது. இதுவே மே தினத்தின் பிறப்பு அம்சமாகும்.

இம் மே போராட்டத்தை நினைவு கூராத நாடே கிடையாது. தொழிலாளர் மாத்திரமல்லாது அனைவரும் ஸ்தாபன ரீதியாக நினைவு கூருகின்றார்கள்.

உழைக்கும் மக்களிடையே மே தினம் எந்தளவிற்கு தாக்கும் சக்தியுள்ளது என்பதை அறிய இத்தினத்தை முதலாளித்துவ வர்க்கமும் கொண்டாட ஆரம்பித்தமை இதை வெளிச்சமாக்கின்றது. இதன் வெளிப்பாடு பெறுவது முதலாளித்துவ வர்க்கத்தின் சாகசமும் மானம் கெட்ட தன்மையுமே ஆகும். இம் மே தினப்போராட்டத்திற்கு உந்து கோலாகவும் அனுபவப் படிப்பினையாகவும் அமைந்தது. "1871 பாரீஸ் கம்யூன் என அழைக்கப்படும் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் ஆகும். இதன் மூலமாகவே பாட்டாளி வர்க்கம் வர்க்க ரீதியாக பட்டை „தீட்டப்பட்ட போர்க்-குணம் பெற்று சிலிர்த்துக் கொண்டது எனலாம். இக்காரணத்தாலேயே "1871 பாரீஸ் கம்யூன்" பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது அரசியல் பள்ளி என வரலாற்றுப் பின்னணி கூறுகின்றது.

1889ல் பாரீஸ் நகரில் இடம் பெற்ற உலகக் கம்யூன் இயக்கத்தின் முதலாவது மாநாட்டில் 1890 மே முதலாம் திகதி முதல் தினத்தை சர்வதேசிய தொழிலாளி வர்க்க தினமாக நினைவு கூரத் தீர்மானிக்கப்பட்டது. இத்தினமே இன்று மே தினமாக நடைமுறையாகி வருகின்றது. இலங்கையில் 1956 முதல் இத் தினம் பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையில் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இம் மே தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் இக்காலப்பகுதியில் அதாவது 1948 முதல் இன்று வரை எமது பாட்டாளிகளான மலையக மக்கள் எதேச்சாதிகாரிகளுடைய மிலேச்சத்-தனத்திற்கும், மிருகவெறி தனங்களிற்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு காரணம் கடந்த காலங்களில் பதவியேற்ற முதலாளித்துவ அரசாங்கங்களாகும். இவர்கள் ஒடுக்கல்கள் ஒட்டு-மொத்தமாக நீக்கப்பட போர்த்துக் கொண்டிருக்கும் சூரியன் ஏழைகளின் குடிசைகளுக்குள் இறங்கி வந்து அவர்களின் வெளிச்சத்தை விசாரித்துச் செல்லும் நிலை நீங்க முன்வர்க்கே முற்றும் கற்றுக் கொடுக்கும் பாட்டாளிகளே புரட்சிப் புற்றுக்குள் நுழைந்த வர்க்கப் போராட்டத்தை முன்னெடுங்கள்.

1886 முதல் இன்று வரையான நூற்றாண்டு காலப்பகுதியில் பாட்டாளிகளின் உறுதி மிக்க இப் போராட்டத்தாலேயே இன்று உலக முதலாளித்துவத்துடன் தோளோடு தோள் மோதும் வலிமை கொண்டதாக உலக சோசலிஸ அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் உத்தரதலாலும் உத்வேகத்தாலும் தான் இன்றைய பிரச்சனை உலகு நிகழ் காலத்தின் நிர்வாணத்தை நிவர்த்தி செய்ய சிவப்பு சீலை நெய்து கொண்டிருக்கிறது. ஆதலால் அனைத்துச் சக்திகளும் ஒரணியின் கீழ் அணி திரண்டு வர்க்க விடுதலையை முன்னெடுப்போமாக.

கடந்த நூற்றாண்டில் நடைபெற்ற இப் பாட்டாளிகளின் போராட்டத்தில் இன்னுயிர் ஈந்த அனைத்துப் பாட்டாளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

கற்பதற்காக போராடுவோம்

போராடுவதற்காக கற்போம்

மாணவர் இளைஞர் பொதுமன்றம்
(GUYS)
- திருகோணமலை -

www.padippakam.com

# செம் பாட்டாளிகளின் சிவந்த மே தினம்

வானத்து மேக மூட்டங்களை
பூமிக்கு அழைத்து வந்து
குருதியால் இழைத்த தாலியால்
பனிக்கூட்டத்திற்கு மணம் முடித்து விடு
அந்த(த்)ப் பந்தியிலேயே பட்டினியோடு
அழுது கொண்டு இருக்கும் மனித மனங்களை
மக்கள் நீங்கள் அறிவீர்களா?

வறுவாற்றுப் புத்தகங்களை
சிவப்புச் சிரத்தால் அழுத்திட்டால்
தீர்ந்து விடுமா பிரச்சினை?
தீர முழக்கமிட்டு
திரண்டு விட்ட மே தினத்தில்
கிழித்தெறிய வேண்டும்
முதலாளியத்தின் முகமூடி யதனை

பாட்டாளிச் சிரங்களுக்கு
விலங்கிட்ட முதலாளியம்
உடைத் தெறியப்பட......

வோட்டுப் பிரச்சினையோடு
வேட்டுப் பிரச்சினை தீர......

கூடணியுள்ள தொழிலாளி
தலை நிமிர்த்த வேண்டுவது
சிவப்பு விடியலைத்தான்!